விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 326 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 24 திங்கட்கிழமை (10.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

அதிரடி கிறிஸ்துமஸ் சலுகைகள் முன்கூட்டியே வந்துள்ளன
நாங்கள் உங்கள் வீட்டுக்கு டெலிவரி செய்கிறோம்
சிறப்பு தள்ளுபடிகள்
11kg க்கு மேல் 01kg க்கான கட்டணம் (5481)
பிரான்ஸ் Rs.2150/= இங்கிலாந்து Rs.1400/= ஜெர்மனி Rs.2000/=
இல. 81A, பருத்தித்துறை வீதி, நெல்லியடி
இல.225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
GTV Express 011 4 654 444

வாழ்த்துகின்றோம்

இன்று ஆரம்பமாகவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.
கல்விப் பிரிவு, வலம்புரி

## க.பொ.த உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பம்
### அனைத்து ஏற்பாடுகளும் தயார்

(கொழும்பு)
கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் தற்போது தயார் நிலையில் உள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.
அதன்படி இன்று (10) ஆரம்பமாகும் உயர்தரப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.
15ஆம் பக்கம் பார்க்க

### போதைப்பொருட்களுடன் படகு மீட்பு
## மாலைதீவுக்குச் சென்ற இலங்கை விசேட குழு

(கொழும்பு)
மாலைதீவு பாதுகாப்புப் பிரிவினரால் பொறுப்பேற்கப்பட்ட போதைப்பொருள் கடத்திய மீன்பிடிப் படகு மற்றும் அதன் மீனவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள, நாட்டின் பாதுகாப்புப் பிரிவுகளின் விசேட குழுவொன்று மாலைதீவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளது.
இவ்வாறு மாலைதீவுக்குப்
02ஆம் பக்கம் பார்க்க

## சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்ட
# 200 பேர் வெளிநாட்டில்
### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால

(கொழும்பு)



- வெளிநாட்டில் தங்கியுள்ள குற்றவாளிகளை அந்தந்த நாடுகளில் வைத்து கைது செய்ய நடவடிக்கை.
- 7 போதைப்பொருள் கடத்தல்காரர்கள் சரணடைய இணக்கம்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் வலிப்பு ஏற்பட்ட இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
யாழில் வலிப்பு ஏற்பட்ட இளைஞன் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.
கோப்பாய் தெற்கு, கோப்பாய் பகுதியைச் சேர்ந்த சிவானந்தன்
15ஆம் பக்கம் பார்க்க

### கோப்பாய் கிழக்கில்
## மூச்செடுக்கச் சிரமப்பட்ட இளம் யுவதி மரணம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் கோப்பாயில் மூச்செடுக்க சிரமப்பட்ட யுவதி ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.
இருபாலை, கோப்பாய் கிழக்கு என்ற முகவரியைச் சேர்ந்த பிரதீப்
15ஆம் பக்கம் பார்க்க

## ஐஸ் போதைப்பொருளுடன் கிளிநொச்சியில் பெண் கைது

(கிளிநொச்சி)
ஐஸ் போதைப்பொருளுடன் கிளிநொச்சியில் பெண்ணொருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
வட மாகாண போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக கிளிநொச்சி விநாயகர் பகுதியில் ஏழு கிராம் 750 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 45 வயது மதிக்கத்தக்க பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.
கைது செய்யப்பட்ட பெண் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில்
15ஆம் பக்கம் பார்க்க

### - யாழில் போதைப்பொருட்களுடன் -
## நேற்று ஒரே நாளில் மட்டும்
### 17 வயது சிறுவன் உட்பட 23 பேர் கைது



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் போதைப்பொருட்களுடன் நேற்று ஒரே நாளில் 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கைது செய்யப்பட்ட
02ஆம் பக்கம் பார்க்க

### யாழைச் சேர்ந்த இரு இளைஞர்கள்
## கைத்துப்பாக்கியுடன் வத்தளையில் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு இளைஞர்கள் வத்தளையில் கைத்துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.
நேற்று முன்தினம் காலை இந்தச் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.
வத்தளை பொலிஸ்
15ஆம் பக்கம் பார்க்க

### வடக்கு, கிழக்கில் இணையம் மூலம்
## நிதி மோசடிகள் அதிகரிப்பு
### பொலிஸ் ஊடகப் பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)
வடக்கு, கிழக்கில் இணையம் மூலம் நடைபெறும் நிதி மோசடிகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.
நிதி மோசடிகள் குறித்து அவதானமாகச் செயற்படுமாறு பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்றைய தினம் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,
15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாற் நன்றின்றி காக்கும் உங்கள் நாளிதழ்

# நாட்டில் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்தில்

## 4 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையின் பல பகுதிகளில் நேற்று முன்தினம்(8) இடம்பெற்ற வெவ்வேறு வாகன விபத்துக்களில் நான்கு பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விபத்துச் சம்பவங்கள் மாத்தளை, தனமல்வில, வெலிகந்த மற்றும் கொட்டவில ஆகிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெற்றுள்ளன.

வெலிகந்த - அசேலபுர பகுதியில் அசேலபுர - குருலுபெத்த வீதியில் உழவு இயந்திரம் எட்டு வயது சிறுவன் மீது மோதியது.

இதன்போது, அசேலபுரத்தைச் சேர்ந்த குறித்த சிறுவன் பலத்த காயமடைந்து வெலிகந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் உயிரிழந்தார்.

அதேவேளை, கண்டி - யாழ்ப்பாணம் அதிவேக நெடுஞ்சாலையில் தியாபுபுல பாலத்திற்கு அருகில், மாத்தளையிலிருந்து எல்வெல நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டி பாதசாரி ஒருவர் மீது மோதியது.

இதன்போது பலத்த காயமடைந்த 70 வயதுடைய முதியவர் மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

தனமல்வில - வெல்லவாய வீதியில் பலஹருவ பகுதியில் எதிர்த்திசையில் பயணித்த வான் ஒன்று லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது பலத்த காயமடைந்த 45 வயதான வான் சாரதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

கொட்டவில - கம்புருகமுவ பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று உழவு இயந்திரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் கம்புருகமுவவைச் சேர்ந்த 82 வயதான சாரதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். (ம-7)

# குளியலறையில் வழுக்கி விழுந்த பல்கலை மாணவி மரணம்

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் சுகாதார அறிவியல் பீடத்தில் தாதியர் மற்றும் குடும்ப சுகாதார பட்டப்படிப்பை பயின்று வரும் மூன்றாம் ஆண்டு மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தனது வீட்டின் குளியலறையில் வழுக்கி விழுந்து தலையில் பலத்த காயங்களுடன் கண்டி தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

கண்டி,ஹன்டெஸ்ஸா பகுதியைச் சேர்ந்த எச்.எம். எல்.டி. ஜெயதிலகா என்ற மூன்றாம் ஆண்டு மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பல்கலைக்கழகத்தில் இருந்து 6 ஆம் திகதி வீடு திரும்பிய மாணவி, குளியலறையில் வழுக்கி விழுந்ததாகவும் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கண்டி தேசிய மருத்துவமனையின் நரம்பியல் அறுவைச் சிகிச்சை தீவிரப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மாணவி நேற்று முன்தினம் (08) உயிரிழந்துள்ளார்.

டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் பரீட்சைகளுக்கு தயாராகிக் கொண்டிருந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார். (ம-7)

## 200 பேர்...

ஊடகங்களுக்கு நேற்று வழங்கிய செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், இலங்கையில் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்ட 200 பேர் வெளிநாடுகளில் தங்கியுள்ளனர்.

வெளிநாடுகளில் தங்கியுள்ள சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டவர்களில் 80 பேர் பாரிய குற்றச் செயல்களில் ஈடுபட்ட, திட்டமிட்ட குற்றக்குழுக்களைச் சேர்ந்தவர்கள்.

இந் நிலையில், வெளிநாடுகளில் தங்கியுள்ள குற்றக் குழு உறுப்பினர்களில் பலர் அந்தந்த நாடுகளில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

சுற்றுலா சென்றுள்ள போர்வையில் அவர்கள் அங்கு தங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளவர்களில் அதிகமாகத் தேடப்படுவோர் பட்டியலில் உள்ளவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அந்தவகையில் குறித்த சந்தேக நபர்களை நாட்டிற்கு அழைத்து வருவது தொடர்பில் சம்பந்தப்பட்ட நாடுகளுடன் தேவையான இராஜதந்திர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

அத்துடன், வட இந்தியாவில் செயற்படும் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான தாவூத் இப்றாஹீமின் போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் இந்திய ஊடகங்கள் வெளியிட்ட செய்தி தொடர்பிலும் அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் வினவினர்.

இந்த விடயம் தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இதற்கு பதில் வழங்கினார்

மேலும் மத்திய கிழக்கு நாடுகளில் மறைந்து போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் ஏழு பேர் இலங்கை அதிகாரிகளிடம் சரணடைய ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

குறித்த ஏழு பேரும் இலங்கையை பூர்வீகமாக கொண்டவர்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## மாலைதீவு...

புறப்பட்டுச் சென்ற குழுவில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகளும் கடற்படையைச் சேர்ந்த அதிகாரிகளும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையூடாகச் செயற்படும் போதைப்பொருள் கடத்தல் வலையமைப்புத் தொடர்பில் நாட்டின் பாதுகாப்புப் பிரிவுகள் வழங்கிய புலனாய்வுத் தகவல்களுக்கமைய, மாலைதீவு பாதுகாப்புப் பிரிவினர் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட மீன்பிடிப் படகு ஒன்றையும் ஆறு மீனவர்களையும் கைது செய்துள்ளனர்.

குறித்த படகு தற்போது மாலைதீவுக்குக் கொண்டு செல்லப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் தொகுதியையும் மீனவர்களையும் விசாரணை செய்வதற்காக இலங்கைப் பிரதிநிதிகள் குழுவொன்று தற்போது மாலைதீவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## யாழில்...

வர்களில் 17 வயது சிறுவன் போதை மாத்திரைகளை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் நேற்றைய தினம் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போது, யாழ். நகரை அண்டிய பகுதிகளில், 10 பேர் ஐஸ் போதைப்பொருளுடனும், 17 வயது சிறுவன் உள்ளிட்ட 09 பேர், போதைமாத்திரைகளுடனும், 04 பேர் ஹெரோயின் போதைப்பொருளுடனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ளவர்கள் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகள் எடுத்துள்ளனர். (ம-7)

# மரண அறிவித்தல்



## திருமதி இராசசிங்கம் இந்திராதேவி

மலேசியா சிறம்பானைப் பிறப்பிடமாகவும் கரணவாய் தெற்கு மற்றும் கரவெட்டி மத்தியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசசிங்கம் இந்திராதேவி அவர்கள் நேற்று (09.11.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு இராசசிங்கத்தின் மனைவியும் பாஸ்கரன் (பாதுகாப்பு அலுவலர் இலங்கை வங்கி கோப்பாய்), சிறீதரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), பிரபாகரன் ஆகியோரின் தாயாரும் சுகந்தினி, மகேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் அபிபரன், கலைநிலா ஆகியோரின் பேர்த்தியாரும் காலஞ்சென்றவர்களான சகுந்தலாதேவி (தவம்), சாவித்திரிதேவி(ராசா), உமாதேவி(ஜெயம்), பூமாதேவி(ஜெகதா) மற்றும் சந்திராதேவியின் சகோதரியும் காலஞ்சென்ற கந்தப்பு மற்றும் தெய்வானையின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரிகைகள் இன்று 10.11.2025 பிற்பகல் 2 மணியளவில் இலகடி வீதி, கரவெட்டி மத்தியிலுள்ள பெறாமகள் வசந்தி(வைத்தியர்) அவர்களின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

(5880)



68 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

வடக்கின் விடிவெள்ளியாய் என்றும்
மக்கள் போற்றும் நாயகனாய்
விளங்கும் மாண்புமிகு

கே.என்.டக்ளஸ் தேவானந்தா

அவர்களுக்கு

பிறந்தநாள் வாழ்த்துக்கள்




வடக்கின் விடிவெள்ளியாய் வலம் வந்து
வான்மைமிகு செயல்களில் முன்னின்று
எம் தேசத்தைக் கட்டியெழுப்ப
தோழோடு தோழ் தந்த தோழருக்கு
இனிய அகவை நாள் வாழ்த்துக்கள்

(5875)

வாழ்த்துவோர் :
யாழ். பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்வெசுமவிலுள்ள அனைத்துக் குடும்பங்களும் தகவல்களைப் புதுப்பிக்க வேண்டும்

## நலன்புரி நன்மைகள் சபை

**(கொழும்பு)..................... அஸ்வெசுமவின் முதல் கட்டத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களும் தனிநபர்களும் தகவல் புதுப்பித்தலில் பங்கேற்பது கட்டாயமாகும் என்றும், பங்கேற்காத குடும்பங்களும் தனி நபர்களும் அடுத்த ஆண்டில் அஸ்வெசும கொடுப் பனவுக்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்படு வார்கள் என்றும் நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.**

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான அஸ்வெசும கொடுப்பனவின்வரு டாந்த தகவல் புதுப்பிப்பு தற் சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டில் அஸ் வெசுமவில் முதன் முறை யாகப் பதிவுசெய்து தற்போது கொடுப்பனவுகளைப் பெறும் மற்றும் பெறாத குடும்பங்கள் மற்றும் தனிநபர்கள் இந்த புதுப்பிப்பை மேற்கொள்ள வேண்டும் என்று அந்த சபை குறிப்பிட்டுள்ளது.


எவ்வாறாயினும் 2024 ஆம் ஆண்டில் மனக் குறை களை தெரிவித்த விண் ணப்பதாரர்களுக்குத் தகவல் களை புதுப்பிக்க வேண்டிய கட்டாயமில்லை என்றும், அத ற்குக் காரணம், அந்த விண் ணப்பதாரர்கள் ஏற்கனவே தகவல் ஆய்வுக்காக அனுப் பப்பட்டுள்ளனர் என்றும் நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

மேலும், தகவல்களை மீண்டும் உறுதிப்படுத்தும் போது, குடும்ப உறுப்பினர் களின் தேசிய அடையாள அட்டை மற்றும் செயற்படக் கூடிய கையடக்கத் தொலை பேசி இலக்கம் என்பன இருப் பது அத்தியாவசியமாகும் என் றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இணைய இணைப்புள்ள கணனி அல் லது ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி மூலம் https://eservices.wbb.gov.lk என்ற இணைய முகவரிக்குச் சென்று, QR தாளில் குறிப்பிட ப்பட்டுள்ள தமது HH இலக்கம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பயன் படுத்தித் தகவல் முறைமைக் குள் உட்பிரவேசித்து, தகவல் உறுதிப்படுத்தல் மெனுவிற்குச் சென்று குடும்பத் தகவல்களை உள்ளிடலாம் என குறிப்பிடப் பட்டுள்ளது.

அவ்வாறு இல்லையெ னில், பிரதேச செயலகத்தின் நலன்புரி கொடுப்பனவுத் தக வல் பிரிவுக்குச் செல்வதன் மூலமாகவோ அல்லது கிராம உத்தியோகத்தர் ஊடாக ஆண்டுத் தகவல் புதுப்பிப்பு விண்ணப்பப் படிவத்தை பிர தேச செயலகத்தின் நலன்புரி கொடுப்பனவுப் பிரிவில் சமர்ப்பிக்கலாம் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. (8)

# ரில்வின்சில்வா - சுவிஸ் தூதுவர் சந்திப்பு



(கொழும்பு) மக்கள் விடுதலை முன்ன ணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவை சுவிட்ச ர்லாந்து தூதுவர் சிறி வோல்ட் சந்தித்துப் பேசியுள்ளார்.

பத்தரமுல்ல, பெலவத் தையில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அண்மையில் இலங்கை பாராளுமன்றக் குழுவொன்று சுவிட்சர்லாந்துக்கு மேற் கொண்ட பயணம் தொடர்பாக வும் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டுள் ளது. (8)

# அரசுக்கு எதிரான பேரணியில் பங்கேற்கப் போவதில்லை

## விமல் வீரவன்ச

(கொழும்பு) அநுரகுமார திசாநாயக் கவின் அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நவம்பர் 21 ஆம் திகதி நடாத்தவுள்ள , பேர ணியில் முக்கிய எதிர்க்கட்சி ஒன்று பங்கேற்கப்போவ தில்லை என்று அறிவித்துள் ளது.


முன்னதாக இந்த பேர ணியில் பங்கேற்பதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச அறிவித்திருந்தார்.

இந்நிலையில் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி இந்த பேரணியில் பங்கேற்காது என்று அறிவித்துள்ளது.

பல காரணிகளைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக, விமல் வீரவன்ச வெளியிட்டுள்ள அறி க்கையில் தெரிவிக்கப்பட்டு ள்ளது. (8)

# அரசுக்கு எதிரான பேரணி கடும் அழுத்தமாக அமையும்

## நாமல் எச்சரிக்கை



(கொழும்பு) நுகேகொடை பேரணி அரசாங்கத்திற்கு கடும் அழுத்தமாக அமையும் என பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப் பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடக ங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டு மக்களுக்கு வழ ங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அர சுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலேயே நுகே கொடையில் எதிர்வரும் 21 ஆம் திகதி பேரணி இடம் பெறவுள்ளது.

இதில் பங்கேற்குமாறு எதிர்க்கட்சிகளுக்கு அழை ப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்பு குறித்து கட்சிகள் எடுக்கும் முடிவை நாம் மதிக்கின்றோம்.

நுகேகொடை பேர ணியில் முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ச பங்கேற்கமாட்டார்.

எனினும், அவரது ஆசிர் வாதம், ஆதரவு அந்தக் கூட்டத்துக்கு நிச்சயம் இரு க்கின்றது. மக்களுக்காகக் களத்தில் இறங்கி போரா டிய தலைவர் தான் மகிந்த ராஜபக்ச.

அவரின் வழிகாட்ட லுடன் எமது பயணம் தொட ரும்.

**நுகேகொடை அரசியல் சமரானது அரசுக்கு நிச் சயம் கடும் அழுத்தமாக அமையும் எனத் தெரி வித்துள்ளார். (8)**

# மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை பதவிக் காலத்திற்குள் நிறைவேற்றுவோம்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

(கொழும்பு) சட்டம் அனைவருக்கும் பொதுவான வகையில் பாரபட்சமின்றி செயற்படும் போது அதனை ஜனநாயகத் துக்கு விரோதமான செயற் பாடு என்று எவ்வாறு குறிப் பிடுவது. எதிர்க்கட்சிகளை இலக்காகக் கொண்டு நாங்கள் ஆட்சிக்கு வரவில்லை. மக் களை இலக்காகக் கொண்டே ஆட்சிக்கு வந்துள்ளோம். மக்களுக்கு வழங்கிய வாக் குறுதிகளை பதவி காலத்துக் குள் நிறைவேற்றுவோமென பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற 2026 ஆம் ஆண் டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

**அரசாங்கம் ஜனநாய கத்துக்கு எதிராக செயற்படு கிறது, ஜனநாயகம்** அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட் டுள்ளதாகவும், பல கல்வி முறைமை பலவீனமடை ந்துள்ளதாகவும் எதிர்க்கட்சி யினர் குற்றஞ்சாட்டுகிறார்கள். ஜனநாயகம் எங்கு அச்சுறுத் தலுக்குள்ளாகியுள்ளது என்று எதிர்க்கட்சியினர் குறிப்பிட வேண்டும்.

சட்டம் அனைவருக்கும் பொதுவான வகையில் பார பட்சமின்றி செயற்படும் போது அதனை ஜனநாயகத்துக்கு விரோத செயற்பாடு என்று எவ்வாறு குறிப்பிடுவது.

பல கட்சி முறைமையை இல்லாதொழிக்க வேண்டிய அவசியம் எமக்கு கிடையாது. எதிர்கட்சிகளின் செயற்பாடு களினால் தான் பல கல்வி முறைமை பலவீனமடையும். எதிர்க்கட்சிகளை இலக்காகக் கொண்டு நாங்கள் ஆட்சிக்கு வரவில்லை. மக்களை இலக் காகக் கொண்டே ஆட்சிக்கு வந்துள்ளோம்.

**ஜனாதிபதியால் சமர்ப்பிக் கப்பட்ட வரவு- செலவுத் திட்டத்தில் அனைத்து இன மக்களும் உள்ளடக்கப்பட்டு**




ள்ளார்கள். நாட்டின் நிதி நிலைமையை கருத்திற் கொண்டு அனைத்து தரப்பின ருக்கும் நிவாரணமளிக்கப்பட் டுள்ளது.

அரச துறை மற்றும் கல் வித்துறை மறுசீரமைப்புக்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆட்சிக்கு வந்து ஒருவருட காலத்தில் வழங்கிய வாக் குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றுவதாக மக்க ளுக்கு குறிப்பிடவில்லை. **பொருளாதாரத்தை ஸ்திரப்ப டுத்திக் கொண்டு தான் வாக் குறுதிகளை நிறைவேற்ற முடியும் என தெரிவித்தார். (8)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# ரி-20 கிரிக்கெட்டில் உலக சாதனை படைத்த அபிஷேக் சர்மா



சர்வதேச ரி-20 கிரிக்கெட்டில் அதிவேக 1000 ஓட்டங்கள் எடுத்து அபிஷேக் சர்மா உலக சாதனை படைத்துள்ளார்.

சர்வதேச ரி20 போட்டிகளில் குறைந்த பந்துகளை எதிர்கொண்டு, 1,000 ஓட்டங்களை குவித்த வீரர்களின் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார்.

முன்னதாக, அவுஸ்திரேலியா வீரர் டிம் டேவிட் 569 பந்துகளில் 1,000 ஓட்டங்களை எட்டிய முதல் வீரர் என்ற இடத்தில் இருந்தார்.

அபிஷேக் சர்மா, 528 பந்துகளில், 1,000 ஓட்டங்களை எட்டி, டிம் டேவிட்டின் சாதனையை முறியடித்து முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

மேலும், குறைந்த போட்டிகளில் விளையாடி 1,000 ஓட்டங்களை எட்டிய முதல் இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

அபிஷேக் சர்மா 28 போட்டிகளில் விளையாடி, 1,000 ஓட்டங்களை குவித்துள்ளார். விராட் கோலி 29 போட்டிகளில் இந்த மைல்கல்லை எட்டினார்.

ஆனால் இன்னிங்ஸ் அடிப்படையில், 27 இன்னிங்ஸில் 1,000 ஓட்டங்களை குவித்து விராட் கோலி முதலிடத்தில் உள்ளார். 28 இன்னிங்ஸில் 1,000 ஓட்டங்களை குவித்து அபிஷேக் சர்மா 2 ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# தேசியமட்ட விளையாட்டுப் போட்டியில் சாதித்த மாணவர்கள் கௌரவிப்பு


தேசிய மட்ட விளையாட்டு போட்டிகளில் வவுனியா மாவட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி வெற்றிவாகை சூடிய வீரவீராங்கனைகளுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இம்முறை இடம்பெற்ற தேசிய மட்ட விளையாட்டு போட்டியில் அரை மரதனில் 1 ஆம் இடத்தையும், 5000 மீற்றரில் புதிய சாதனையையும், 1500 மீற்றரில் 2 ஆம் இடத்தையும் விகிர்தன் பெற்றுக் கொண்டதுடன், பரிதி வட்டம் வீசலில் கிருசிகன் 1 ஆம் இடத்தையும், பளு தூக்கலில் கோசிகா 1 ஆம் இடத்தையும் பெற்று வவுனியா மாவட்டத்திற்கு பெருமை சேர்த்திருந்தனர்.

தேசிய மட்ட ரீதியில் வவுனியா மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த குறித்த மூவருக்குமான கௌரவிப்பு நிகழ்வு வவுனியா தெற்கு வலயக் கல்வி பணிமனையின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இதன்போது வவுனியா பழைய பேருந்து நிலையத்தருகே மாலை அணிவித்து பான்ட் வாத்தியம் முழங்க வலயக்கல்வி அலுவலக மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து மூவருக்கும் பொன்னாடை போர்த்தி பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது. (3)



# தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரை வென்ற பாகிஸ்தான்



பாகிஸ்தான்- தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையில் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்றது. முதல் இரண்டு போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்றிருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் 3 ஆவது மற்றும் இறுதி போட்டி பைசலாபாத்தில் நடைபெற்றது. இந்த போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற தென்னாப்பிரிக்கா துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அதன்படி பிரிட்டோரியஸ், டி காக் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். இருவரும் சிறப்பான தொடக்கம் கொடுத்தனர்.

பிரிட்டோரியஸ் 45 பந்தில் 39 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தனர். டி காக் 70 பந்தில் 53 ஓட்டங்கள் சேர்த்தார். அதன்பின் தென் ஆப்பிரிக்கா விக்கெட்டுகள் சீட்டுக்கட்டுபோல் சரிய ஆரம்பித்தன. இதனால் 37.5 ஓவர்களே தாக்குப்பிடித்து 143 ஓட்டங்களில் சுருண்டது.

தென்ஆப்பரிக்கா முதல் விக்கெட்டுக்கு 71 ஓட்டங்கள் எடுத்திருந்தது. டி காக் ஆட்டமிழக்கும்போது 3 விக்கெட் இழப்பிற்கு 103 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அதன்பின் 7 விக்கெட்டுகளை இழந்தது. பாகிஸ்தான் அணி தரப்பில் அப்ரார் அகமது 4 விக்கெட்டும் ஷாஹீன் ஷா அப்ரிடி, சல்மான் ஆகா, முகமது நவாஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

பின்னர் 144 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற எளிதான இலக்குடன் பாகிஸ்தான் களம் இறங்கியது. தொடக்க வீரர் சைம் ஆயூப் 70 ஓட்டங்கள் விளாசினார்.

ரிஸ்வான் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்கள் எடுக்க 25.1 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 144 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. (3)

# மழையால் கைவிடப்பட்ட போட்டி ஏமாற்றத்தில் அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் விளையாடியது. இதில் 4 போட்டிகள் முடிவடைந்த நிலையில் இந்திய அணி 2-1 என்ற கணக்கில் (முதல் போட்டி மழையால் ரத்து) தொடரில் முன்னிலை வகித்தது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 5 ஆவது மற்றும் இறுதி போட்டி பிரிஸ்பேனில் உள்ள கப்பா ஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் துடுப்பாட்டம் வென்ற அவுஸ்திரேலியா பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் துடுப்பாட்டம் செய்ய களமிறங்கிய இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக அபிஷேக் சர்மா - சுப்மன் கில் களமிறங்கினர்.

ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடிய இந்த ஜோடி அவுஸ்திரேலிய பந்துவீச்சை வெளுத்து வாங்கியது. இந்திய அணி 4.5 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 52 ஓட்டங்கள் அடித்திருந்தபோது மோசமான வானிலை மற்றும் மழை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது. அபிஷேக் சர்மா 23 ஓட்டங்களுடனும், கில் 29 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். மழை நின்று, போட்டி மீண்டும் தொடங்கும் என ரசிகர்கள் மைதானத்தில் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

ஆனால் மழை இடைவிடாமல் தொடர்ந்து பெய்துகொண்டே இருந்தது. இதன் காரணமாக போட்டி ரத்து செய்யப்படுவதாக நடுவர்கள் அறிவித்தனர். முதல் போட்டியில் மழையால் பாதியில் ரத்துசெய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

2, 3 மற்றும் 4 ஆவது போட்டிகளின் முடிவில் இந்திய அணி 2-1 என்ற கணக்கில் தொடரில் முன்னிலை பெற்றிருந்தது. இறுதி போட்டியில் ரத்துசெய்யப்பட்டதால், இந்திய அணி தொடரை கைப்பற்றியது. இறுதி போட்டியை வென்று தொடரை சமன் செய்துவிடலாம் என்று அவுஸ்திரேலிய அணியினர் எண்ணிக்கொண்டிருந்த நிலையில், அவர்களது ஆசை மழையால் நிராசையானது. (3)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தகுதி அடிப்படையிலேயே

# அரச ஊழியர்களுக்கான வேலைகள் வழங்கப்படும்

## பிரதி அமைச்சர் ருவான்

**(கொழும்பு) ..............................**

**எதிர்காலத்தில் தகுதி அடிப்படையிலேயே அரச ஊழியர்கள் உள்வாங்கப்படுவார்கள் என்று பிரதி அமைச்சர் ருவான் சென விரத்ன தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் இடம் பெற்ற 2026ஆம் ஆண்டுக் கான வரவு-செலவுத் திட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

மேலும், இந்த நாட்டில் அரச துறையானது கடந்த கால ங்களில் அரசியல் மயப்படுத் தப்பட்டு அரசியல் பிரசாரங் களுக்காக பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும் அவர் குறிப் பிட்டார்.

இவ்வாறு சீரழிக்கப்பட்ட அரச சேவை பின்னர் பயனற்ற ஒரு சேவையாக மாறிவிட்ட தாகவும், இதன் காரணமாக சேவையில் பொருத்தமான அரச ஊழியர்கள் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டி னார்.

எனவே, எதிர்காலத்தில் இது போல அரச துறைக்குள், அரசியல் ரீதியான செயற்பாடு களுக்கும், சீரழிவுகளுக்கும் இடமில்லை என பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்காலத் தில் தகுதிகளின் அடிப்படை யில் மட்டுமே அரச ஊழி யர்களுக்கான வேலைகள் வழங்கப்படும் என்றும் பிரதி அமைச்சர் ருவான் செனவிரத்ன மேலும் சுட்டிக்காட்டினார். (8)

## அமைச்சர் விஜித ஹேரத் சவுதி அரேபியா பயணம்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பின் 26 ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்து கொள்வதற்காக வெளி விவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்று லாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் நேற்று முன்தினம் சனிக்கிழமை சவுதி அரே பியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள் ளார்.

11 ஆம் திகதி வரை சவுதியில் தங்கியிருக்கும் அமைச்சர் விஜித ஹேரத், ஐ.நா. உலக சுற்றுலா அமைப் பின் உயர்மட்ட அமர்வுகளில் பங்கேற்பார் என்பதுடன், பல உறுப்பு நாடுகளின் வெளி நாட்டு அமைச்சர்களுடன் இருதரப்பு சந்திப்புகளையும் நடத்தவுள்ளார். 1975இல் நிறுவப்பட்ட ஐ.நா. உலக சுற்றுலா அமைப்பின் ஸ்தாபக உறுப்பினராக இலங்கை உள்ளது.

அமைச்சர் விஜித ஹேர த்தின் இந்தப் பயணம், உலக சுற்றுலா அமைப்பின் மற் றைய உறுப்பு நாடுகளுட னான சாத்தியமான ஒத்துழை ப்புகள் மூலம் இலங்கையின் சுற்றுலா நிகழ்ச்சி நிரலை மேம்படுத்துவதை நோக் கமாகக் கொண்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரி வித்துள்ளது. (8)

### நீச்சல் தடாகத்தில் மூழ்கிய பாலகன்

## பரிதாபமாக உயிரிழப்பு

(கொழும்பு)

சிகிரியா பொலிஸ் பிரி வுக்குட்பட்ட அவுடங்காவ பகுதியில் ஹோட்டல் ஒன்றிலுள்ள நீச்சல் தடா கத்தில் மூழ்கி சிறுவன் ஒருவர் உயிரிழந்துள் ளார். இந்த சம்பவம் நேற்று முன்தினம் சனிக் கிழமை இடம்பெற்று ள்ளது. சம்பவத்தில் களனி - தலுகம பகுதி யைச் சேர்ந்த 5 வயது சிறுவனே உயிரிழந் துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவன் தனது பெற்றோருடன் நீச்சல் தடாகத்தில் நீராடியபோது இந்த சம்பவம் நேர்ந் துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரி யவந்துள்ளது.

சடலம் தம்புள்ளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சிகிரியா பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (8)

## இறப்பு எண்ணிக்கை வீழ்ச்சி

(கொழும்பு)

நாட்டில் தாய்மார்க ளின் இறப்பு எண்ணிக் கையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக குடும்ப சுகாதார சேவை கள் பணியகம் தெரிவித் துள்ளது. குடும்ப சுகாதார சேவைகள் பணியகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் இந்த விட யம் தெரிவிக்கப்பட்டுள் ளது. கோவிட் பரவல் குறை ந்துள்ளதால், தாய்மார்க ளின் இறப்பு எண்ணிக் கையில் வீழ்ச்சி ஏற்பட் டுள்ளது.

அதன்படி, கடந்த ஆண்டு இறுதிக்குள், நாட்டில் 1 இலட்சம் நேரடி பிறப்புகளுக்கு தாய்மார்கள் இறப்பு எண்ணிக்கை 62 ஆக குறைந்துள்ளது. இது மிகவும் சிறந்த நிலைமை என்று குடும்ப சுகாதார சேவைகள் பணியகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது. (8)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 16 - 04 - 1959 |  | 08 - 11 - 2025 |

### அமரர். முருகேசு நவரத்தினம்

**(ஓய்வு பெற்ற தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை ஊழியர்)**

வெள்ளிருவை அல்வாய் கிழக்கு, அல்வாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு நவரத்தினம் அவர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை (08.11.2025) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு- இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி- தங்கச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் தவமலர் தேவியின் அன்புக் கணவரும் ஜாமினி (லண்டன்), வாஸ்கரன் (முகாமையாளர்- ஆர்பிகோ இன்சுரன்ஸ், நெல்லியடி), விச்சு (தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை ஊழியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிருபனின் (லண்டன்) பாசமிகு மாமனாரும் அஞ்சிகாவின் (லண்டன்) பேரனும் தவத்திரவியத்தின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.11.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


(C-4301)

வெள்ளிருவை, அல்வாய் கிழக்கு, அல்வாய்.

தகவல் -குடும்பத்தினர். 077 8171 662, 077 8316 952

## மரண அறிவித்தல்

### இராஜேந்திரம் இராமலிங்கம்



பிறப்பு 02.04.1933 இறப்பு 07.11.2025

தொண்டைமானாறு கெருடாவிலைப் பிறப்பிடமாகவும் சிவிச்சென்ரர் வட்டக் கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேந்திரம் இராமலிங்கம் அவர்கள் கடந்த (07.11.2025)வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(11.11.2025) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் சிவிச்சென்ரர் வட்டக்கச்சி எனும் முகவரியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு– இவ் அறிவித்தல் நேற்றைய பத்திரிகையில் இன்று நடைபெறுவதாக இருந்தது.

(5874)

தகவல் : குடும்பத்தினர் 076 797 8529

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத்திறனாளி குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

(யாழ்ப்பாணம்)

ஜெசாக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நாளை செவ்வாய்க்கிழமை கொடிகாமத்தில் அமைந்துள்ள நட்சத்திரமஹால் மண்டபத்தில் காலை 10 மணிக்கு மாற்றுத் திறனாளிக் குழந்தைகளினுடைய திறமைகளை வெளிப்படுத்தும் "உள்ளடக்கிய திறமை வெளிப்பாட்டு நிகழ்வு" இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த விசேட தேவைப்பாடுடைய குழந்தைகள் பங்குபற்றவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

ஜெசாக் நிறுவனம் உட்படுத்தல், கல்வியை நடைமுறைப்படுத்தல் எனும் நோக்கினை அடிப்படையாக கொண்டு பாடசாலை மட்டங்களிலும், சமூக மட்டங்களிலும் விசேட தேவையுடைய மாணவர்களை இனங்கண்டு அவர்களை கலை மற்றும் கலாசார நிகழ்வுகளில் பங்குபற்றுவதை ஊக்குவிப்பதோடு கல்விச் செயற்பாடுகளிலும் உள்வாங்கப்படுவதனை உறுதி செய்து வருகின்றது.

மாற்றுத் திறனாளிக் குழந்தைகள் சேவைகளை பெறுவதில் முகம்கொடுக்கும் தடைகளை நிவர்த்தி செய்யும் முகமாக அமைச்சுக்கள் மற்றும் அரச அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் 2023 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் சேவை யாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (3-30)

## ஆசிய நாடுகளுக்கிடையிலான மெய்வல்லுநர்; யாழ்.வீரர் ரமணன் சாதனை




ஆசிய நாடுகளுக்கு இடையிலான ஆசிய மாஸ்டர் மெய்வல்லுநர் போட்டியில் இலங்கையை பிரதி நிதித்துவம் செய்த யாழ் வீரர் ரமணன் ஒரு தங்கம் மற்றும் இரண்டு வெள்ளிப் பதக்கங்களைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளார்.

ஆசிய நாடுகளுக்கு இடையிலான 23 ஆவது ஆசிய மாஸ்டர் மெய்வல்லுநர் போட்டி இந்தியாவில் கடந்த 5ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது. இதில் 50 வயதுப் பிரிவின ருக்கான போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்த யாழ் வீரர் செல்வராஜா ரமணன் உயரம் பாய்தலில் தங்கப் பதக்கத்தையும் முப்பாய்ச்சல் மற்றும் கோலூன்றிப் பாய்தல் போட்டிகளில் வெள்ளி பதக்கங்களையும் கைப்பற்றி சாதனை படைத்துள்ளார். இவர் காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரியின் பழைய மாணவன் ஆவார்.

மேற்படி போட்டியில் 22 ஆசிய நாடுகளைச் சேர்ந்த 3000 இற்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கு பற்றியிருந்தனர் இலங்கையில் இருந்து 250 வீரவீராங்கனைகள் பங்கு பற்றியிருந்தமை குறிப்பிட்டதக்கது. (3-90)

## உடையர்கட்டில் கசிப்பு உற்பத்தி சந்தேக நபர் தப்பியோட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடையார்கட்டு குரவில் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு தயாராக இருந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட புனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் மாலை சோதனையினை மேற்கொண்டனர்.

சோதனையின் போது அங்கு இருந்த சந்தேக நபர் பொலிஸாரை கண்டு தப்பியோடியதாகவும் காட்டு பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 250 லீற்றர் அளவிலான சட்டவிரோத கசிப்பினை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில் தப்பியோடிய சந்தேக நபரை அடையாளம் கண்டுள்ளதாகவும், அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (3-299)

## யாழில் இலசவ நீரிழிவு பரிசோதனை முகாம்

(யாழ்ப்பாணம்)

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்.நீரிழிவு கழகம் நடத்தும் இலவச நீரிழிவு பரிசோதனை முகாம் நாளை மறுதினம் புதன் கிழமை காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள மதர் கெயர் வைத்தியசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

மருத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் ஆர்.சுரேந்திரகுமார் ஆரம்பித்து வைக்கும் இப் பரிசோதனை முகாமில் நீரிழிவு பரிசோதனை, இரத்த அழுத்தம், உடல் திணிவுச்சுட்டி மற்றும் வைத்திய ஆலோசனைகள் ஆகிய பரிசோதனைகள் இலவசமாக இடம்பெறவுள்ளதென யாழ்.நீரிழிவுக் கழகத்தினர் அறிவித்துள்ளனர். (3)



சாவகச்சேரி பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா மற்றும் நகர மஞ்சரி இரண்டாவது இதழ் வெளியீட்டு நிகழ்வு ஆகியன கடந்த வெள்ளிக்கிழமை நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்:சுபேசன்)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 300 | 300 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 | 220 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 200 | 250 | 200 |
| தக்காளி | 200 | 200 | 200 | 250 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 280 | 150 | 200 |
| கோவா | 180 | 200 | 200 | 300 | 160 |
| கரட் | 240 | 250 | 250 | 250 | 250 |
| பூசணி | 80 | 60 | 100 | 100 | 50 |
| புடோல் | 150 | 250 | 200 | 250 | 140 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 150 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-300 | 300 | 350 | 155 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 150 | 200 | 155 |
| பாகற்காய் | 600 | 700 | 500 | 1000 | 500 |
| வெண்டக்காய் | 180 | 200 | 200 | 200 | 140 |
| கருணைக் கிழங்கு | 200 | 230 | 250 | 250 | -- |
| பயற்றங்காய் | 250 | 250 | 250 | 200 | 200 |
| லீக்ஸ் | 250 | 230 | 250 | 250 | 200 |
| பீற்றூட் | 200 | 230 | 200 | 200 | 160 |
| கறிமிளகாய் | 600 | 650 | 500 | 800 | 700 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 250 | 400 | 350 |
| போஞ்சி | 400 | 500 | 600 | 600 | 380 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 300 | 300 | -- |
| கீரை - 1 பிடி | 140 | 40-80 | 150 | 150 | -- |
| தேசிக்காய் | 1700 | 1400 | 1600 | 1500 | -- |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 150-200 | -- |
| இராசவள்ளி | 500 | 900 | 600 | 800 | -- |
| வெங்காயப்பூ | 400 | 400 | 600 | | -- |
| முள்ளங்கி | 120 | 160 | 150 | 200 | 160 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 60 | -- |
| வல்லாரை | 80 | 50 | 100 | 80 | -- |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 200 | -- |

# வவுனியா மத்தியஸ்தர் சபை விடுத்துள்ள அறிவிப்பு

(வவுனியா)

உயர்தரப் பரீட்சை காரணமாக மத்தியஸ்தர் சபைகள் பிரதேச செயலகத்தில் செயற்படும் என நீதி அமைச்சின் மாவட்ட பயிற்சி உத்தியோகத்தர் இ.விமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

க.பொ.த உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகுவதால் சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் இயங்கி வந்த மத்தியஸ்த சபை வவுனியா பிரதேச செயலக மண்டபத்தில் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை செயற்படும்.

அதுபோல் வவுனியா குடியிருப்பு பகுதியில் உள்ள இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையில் செயற்பட்டு வந்த வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர் சபை வவுனியா பிரதேசச் செயலக மாநாட்டு மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மதியம் 1 மணி வரை செயற்படும்

எனவே, மத்தியஸ்தர் சபையால் அழைக்கப்பட்டவர்கள் மற்றும் முறைப்பாடு செய்ய செல்பவர்கள் உயர்தரப் பரீட்சை முடியும் வரை பிரதேச செயலகத்திற்கு ஞாயிற்றுக் கிழமைகளில் சென்று ஆற்றுப்படுத்தல்களை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார். (3-260)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிச்சுமை; 10 பேர் கொலை
## தாதி ஒருவருக்கு ஆயுள் தண்டனை

(பேர்லின்)

ஜேர்மனியில் நோயாளிகளுக்கு விச ஊசி போட்டு கொலை செய்த குற்றத்திற்காக தாதி ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஊர்செலன் நகரில் உள்ள மருத்துவமனையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், குறித்த தாதி 2020 ஆம் ஆண்டில் குறித்த மருத்துவமனையில் பணியில் சேர்ந்துள்ளார்.

இந்தநிலையில், இரவு நேரப் பணியின் போது தனக்கு வேலைப் பழு அதிகமாக இருப்பதாக உணர்ந்து, 2023 டிசம்பர் முதல் 2024 மே வரை இவர் பத்து நோயாளிகளைக் கொலை செய்துள்ளார்.

அத்தோடு, 27 பேரைக் கொல்ல முயற்சி செய்துள்ள நிலையில் அவர் மீது வழக்குத் தொடுக்கப்பட்டு அந்த வழக்கு நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த நிலையிலேயே குற்றம் சாட்டப்பட்ட தாதிக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இந்தத் தீர்ப்பை எதிர்த்து அவர் மேல்முறையீடு செய்ய முடியும் என தெரிவிக்கப்படுகின்றது. (க-8)

# யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

**சிற்றுண்டிச்சாலைகள் நடாத்துவதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது 2025/2026**

01. நியதிகள் நிபந்தனைகள் உள்ளடக்கியதான விரிவான கேள்வி கோரல் விபரத்தினை அலுவலகத்தில் பார்வையிட முடியும்.
02. விண்ணப்பங்களை **25/10/2025** முதல் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.
03. 03. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களை **25/11/2025** பி.ப **12.30** மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலாகவோ அலுவலகத்திற்கு அனுப்பவும்.

**அதிபர்**
**யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**
**யாழ்ப்பாணம்**

04. கடித உறையில் வலப்பக்க மேல் மூலையில் **சிற்றுண்டிச்சாலைகள் கேள்வி மனுக்கோரல்** என குறிப்பிடவும்.
05. அதிகாரம் பெற்ற கேள்விச்சபை திகதி **08/12/2025** பி.ப **12.30** மணிக்கு கூடி விண்ணப்பதாரர்களுக்கு முன்பு கேள்விப்பத்திரம் திறக்கப்பட்டு இறுதித்தீர்மானம் எடுக்கப்படும்.
06. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் போது ஒரு விண்ணப்பத்திற்கு ஒருவரே கேள்விப்பத்திரம் திறக்கப்படும் போது பிரதிநிதித்துவப்படுத்த முடியும். ஒரே குடும்பத்தை சேர்ந்த அங்கத்தவர்கள் ஒரு விண்ணப்பபடிவத்தை மட்டுமே சமர்ப்பிக்கமுடியும்.
07. இது சுருக்கமான விளம்பரமாகும்.

**அதிபர்**
**யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

(C-4300)

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
## 27, தாவளை வீதி, வட்டாரம் - 01

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 01. தாவளை வீதியிலுள்ள இல: 27 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **வைத்தி கந்தையா** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை **வேலுப்பிள்ளை வைத்தீஸ்வரன்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு மு.கதிரவேற்பிள்ளை முகதாவில் 1204/12.07.2004ஆம் இலக்க உறுதியால் **வயித்தி நடராசாவும், வயித்தி சின்னத்துரையும், வயித்தி தியாகராஜாவும், கந்தையா சிவபாலனும், கந்தையா சிவராசாவும், கந்தையா சிவசக்திநாதனும், கந்தையா சிவகுமாரும்** ஆகியவர்களிடமிருந்து முதுச நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: **"பதிராதோட்டம்"**
இறை: **வட்டுக்கோட்டை கிழக்கு**
விஸ்தீரணம்: உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஞ.பிரணவன் அவர்களால் 2025.04.16ஆம் திகதி 2779ஆம் இலக்கத்தில் அளந்து வரைந்த நிலஅளவைப் படத்தில் துண்டு ; எனச்சுட்டப்பட்டதன்படி **நில.பர.இலா 02 குளி 11.39**
எல்லைகள்: **கிழக்கு-** ஜெயராஜாவுக்கும் பெண் விஜயாவுக்குமுரிய ஆதனம், **வடக்கு-** வயிரவி பெண் சிவகாமனியின் உரிமைக்காரர்களுக்குரிய ஆதனம் **மேற்கும், தெற்கும்-** தாவளை வீதி

குறித்த **வேலுப்பிள்ளை வைத்தீஸ்வரன்** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **வேலுப்பிள்ளை வைத்தீஸ்வரன்** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை**

(5871)

# எதிர்க்கட்சியினர் வங்குரோத்து நிலையை அடைந்து விட்டனர்

## மஹிந்த ஜெயசிங்க



ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பற்றி பேசுவதற்கு ஒன்றுமில்லை என்று எதிர்கட்சியினர் குறிப்பிடுகிறார்கள்.

ஆம் அவர்கள் குறிப்பிடுவதும் உண்மையே. அவர்கள் குற்றஞ்சாட்டுவதற்கு வரவு -செலவுத் திட்டத்தில் ஏதுமில்லை. மக்களை போலியாக ஏமாற்றாமல், நிலையான பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு வரவு-செலவுத் திட்டத்தை ஜனாதிபதி முன்வைத்துள்ளார்.

புதிய கல்வி மறுசீரமைப்புக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அரசியலில் வங்குரோத்து நிலையடைந்துள்ள எதிர்க்கட்சியினர் வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் போலியான விடயங்களை குறிப்பிடுகிறார்கள். வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நிச்சயம் செயற்படுத்துவோம் என மீண்டும் உறுதிபடத் தெரிவித்தார். (8)

(கொழும்பு)

அரசியலில் வங்குரோத்து நிலையடைந்துள்ள எதிர்க்கட்சியினர் வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் போலியான விடயங்களை குறிப்பிடுகிறார்கள்.

வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நிச்சயம் செயற்படுத்துவோம் என தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது.


# சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்



## திருமதி. ஞானேஸ்வரி பத்மநாதன்
(SLTS-I)

**சேவை விபரம்**

★ 1990.03.28 – 1991.01.04
யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்.
★ 1991.01.05 – 1996.05.31
யா/ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்.
★ 1996.06.01 – 2002.12.31
மு/பாலிநகர் மகாவித்தியாலயம்.
★ 2003.01.01 – 2005.06.27
யா/ புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி.
★ 2005.06.28 – 2011.07.20
யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை.
யா/ புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி. (பகுதி நேரம்).
★ 2011.07.21 – 2012.06.04
யா/ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்.
யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை (பகுதி நேரம்).
★ 2012.06.05 – 2019.12.31
யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்.
யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை (பகுதி நேரம்).
★ 2020.01.06 – 2020.02.12
யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.
★ 2020.12.13 – 2025.11.10
யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை.

எமது வித்தியாசாலையில் மனைப்பொருளியல்
பாட ஆசிரியராகக் கடமையாற்றி, மாணவர் மனதில்
நீங்கா இடம்பிடித்து எமது பாடசாலைக்கு தன்சேவையை
நல்கி ஓய்வுபெற்றுச் செல்லும் நீங்கள் நீண்ட
ஆயுளும், நீடித்த சுகமும், நிறைந்த அமைதியுடனும்
நீடுழி வாழ மணிவிழா
நன்னாளில் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

Best Wishes!


வாழ்த்துவோர் :
நட்புறவுக்கழகம்
யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை

(5863)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியில் முடிந்தது அமைதிப்பேச்சு

## பாகிஸ்தான்-ஆப்கான் எல்லையில் பதற்றம்



(இஸ்லாமாபாத்)

**அமைதிப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததற்கு பாகிஸ்தானின் பொறுப்பற்ற தன்மையும், ஒத்துழையாமையும் தான் காரணம் என ஆப்கானிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது.**



கடந்த 2021 ஆம் ஆண்டு, ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சிக்கு வந்தது முதல் அண்டை நாடான பாகிஸ்தானுடன் மோதல் போக்கை கொண்டுள்ளனர்.

பாகிஸ்தானுக்கு எதிராக செயற்படும் "தெஹ்ரிக்-இ-தலிபான்" என்ற அமைப்புக்கு ஆப்கானிஸ்தான் அடைக்கலம் கொடுப்பதாக பாகிஸ்தான் குற்றம்சாட்டி வருகிறது.

கடந்த மாதம், ஆப்கானிஸ்தானில் பயங்கரவாத கும்பலை குறிவைத்து பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது. அந்தத் தாக்குதலில் 206 பேர் பலியாகினர்.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக தலிபான் நடத்திய தாக்குதலில் 23 பாகிஸ்தான் வீரர்கள் உயிரிழந்தனர்.

பதிலுக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள தெஹ்ரிக்-இ-தலிபான் அமைப்பின் தலைவர்கள் மீது பாகிஸ்தான் வான்வழி தாக்குதல் நடத்தியது.

இதைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையே மோதல் வெடித்தது. இந்த மோதல்களில் உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகிறது.

இதற்கிடையே கடந்த மாத இறுதியில் கத்தார் மத்தியஸ்தத்தில் தற்காலிக போர் நிறுத்தம் ஏற்பட்டது.

தொடர்ந்து துருக்கியில் பல கட்டங்களாக அமைதிப் பேச்சுவார்த்தை நடந்து வந்தது. ஆனால் போர் நிறுத்தத்தை மீறி பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையில் நடந்த துப்பாக்கி சண்டையில் 5 ஆப்கான் பொதுமக்கள் உயிரிழந்தனர். இந்நிலையில் துருக்கியின் இஸ்தான்புல் நகரில் நடந்து வந்த பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் அமைதி பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்துள்ளது. பாகிஸ்தானின் பொறுப்பற்ற அணுகுமுறையே இத் தோல்விக்கு காரணம் என்றும், ஆப்கான் மீதான எந்தவொரு தாக்குதலுக்கும் உரிய பதிலடி கொடுப்போம் எனவும் ஆப்கான் அரசு அறிக்கை வெளியிட்டுள்ளது. (க-8)

# இதயநோய் இருந்தால் விசா இரத்து ட்ரம்ப் அதிரடி உத்தரவு

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்தின் கடுமையான விசா நடைமுறைகள், வெளிநாட்டவர் மீதான அடக்குமுறை நாளுக்கு நாள் மோசமடைந்த வண்ணம் உள்ளன. இதில் விசா வழங்க பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

இந் நிலையில் அமெரிக்கா விசாவிற்கு விண்ணப்பிக்கும் வெளிநாட்டினருக்கு இதய நோய், நீரிழிவு அல்லது உடல் பருமன் போன்ற உடல்நலப் பிரச்சினைகள் இருந்தால் அவர்களின் விண்ணப்பத்தை நிராகரிக்கலாம் என்று ட்ரம்ப் நிர்வாகம் புதிய வழிகாட்டு நெறிமுறையை வெளியிட்டு உள்ளது.

அமெரிக்க விசாவுக்காக விண்ணப்பிக்கும் நபருக்கு தொற்று நோய் இருக்கிறதா, என்னென்ன தடுப்பூசிகளை இதுவரை அவர்கள் செலுத்தி இருக்கிறார்கள், அவர்களின் மனநிலை ஆரோக்கியமாக இருக்கிறதா ஆகியவை ஆய்வு செய்யப்படுவது வழக்கம்.




இதில் தற்போது கூடுதலாக நீரிழிவு, இதய நோய் மற்றும் உடல் பருமன் ஆகியவற்றையும் ட்ரம்ப் நிர்வாகம் சேர்த்துள்ளது. இந்த வழிகாட்டுதல்களை அமெரிக்க தூதரகங்கள் மற்றும் துணை தூதரகங்களுக்கு ட்ரம்ப் நிர்வாகம் அனுப்பி வைத்துள்ளது.

அதில் விண்ணப்பதாரரின் உடல் நலன் எப்படி இருக்கிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். குறிப்பாக இதய நோய், சுவாச நோய், புற்றுநோய், நீரிழிவு, வளர்சிதை மாற்ற நோய்கள், நரம்பியல் நோய்கள் மற்றும் மனநல நிலைமைகள் உள்ளிட்ட சில மருத்துவ நிலைமைகளை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த நோய்கள் பராமரிப்புக்கு லட்சக்கணக்கான டொலர் தேவைப்படலாம் அந்த செலவுகளை ஏற்கக்கூடிய வகையில் விண்ணப்பதாரர் இருக்கிறாரா என்பதையும் விசா அதிகாரிகள் மதிப்பிட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

மேலும் விண்ணப்பதாரரின் குழந்தைகள் அல்லது வயதான பெற்றோர் போன்ற குடும்ப உறுப்பினர்களின் உடல் நிலையை மதிப்பிட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

# உலகின் மிகப்பெரிய சிலந்திவலை கண்டுபிடிப்பு



கிரீஸ் மற்றும் அல்பேனியா எல்லைகளில் அமைந்துள்ள ஒரு பிரமாண்டமான சல்ஃபர் குகைக்குள், மிகப் பெரிய கூட்டுச் சிலந்தி வலை ஒன்றைக் கண்டு பிடித்துள்ளனர்.

இந்த சிலந்தி வலை சுமார் 106 சதுர மீற்றர் பரப்பளவுக்குள் விரிந்து காணப்பட்டுள்ளது.

இந்த வலை ஒற்றைச் சிலந்தியால் பின்னப்பட்டது அல்ல. இந்த அமைப்புக்குள் சுமார் 1 இலட்சத்து 11 ஆயிரம் சிலந்திகள் கூட்டாக வாழ்கின்றன.

இது உலகின் மிகப்பெரிய கூட்டுச் சிலந்தி வலை என வர்ணிக்கப்படுகிறது.

குகைக்குள்ளே தனித்துவமான சூழலியல் அமைப்புகளும், உயிரினங்களின் கூட்டு வாழ்க்கை பாணியும் இந்த அமைப்பின் அடிப்படையாக திகழ்கின்றன.

இதன் மூலம், சிலந்திகளின் கூட்டம் உணவுத் தேடல் மற்றும் பாதுகாப்பில் ஒருங்கிணைந்த செயற்பாடுகளை வெளிக்காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எரிசக்தி மையங்களை குறிவைக்கும் ரஷ்யா

# இருளில் மூழ்கிய உக்ரைன் நகரங்கள்

(கீவ்)

**உக்ரைனின் மிகப் பெரிய எரிசக்தி மையங்களின் மீது ரஷ்யா நடத்திய தாக்குதல்களினால், அந்நாட்டின் ஏராளமான பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.**



உக்ரைனின் வடகிழக்கு கார்கிவ் மற்றும் தெற்கு ஒடெசா பகுதிகளில் உள்ள எரிசக்தி மையங்களைக் குறிவைத்து ரஷ்யா மிகப் பெரியளவிலான தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனில் குளிர்காலம் தொடங்கியுள்ள நிலையில், இந்தத் தாக்குதல்களினால் இயற்கை எரிவாயுவின் விநியோகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால், குளிரில் இருந்து தங்களை பாதுகாக்க மக்கள் பயன்படுத்தும் ஹீட்டர் உள்ளிட்ட சாதனங்களை எரிவாயு இன்றி இயக்க முடியாமல் தவிப்பதாக பொதுமக்கள் கூறியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து உக்ரைனின் பல பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு இருளில் மூழ்கியுள்ளதால் மின் பற்றாக்குறையைச் சமாளிக்க அவசரகால மின் தடைகள் ஏற்படுத்தப்படுவதாக உக்ரைனின் எரிசக்தி அமைச்சர் ஸ்விட்லானா க்ரின்சுக் தெரிவித்துள்ளார்.


இந்தத் தாக்குதலில் உக்ரைனின் டினிப்ரோ நகரத்தில் உள்ள 9 அடுக்கு மாடி கட்டடம் தகர்க்கப்பட்டு, பெண் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும், ஒரு குழந்தை உட்பட 6 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

2022 ஆம் ஆண்டு முதல் 3 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வரும் இந்தப் போரில், ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய இருநாடுகளும் எரிசக்தி மையங்கள் மற்றும் கட்டடங்கள் ஆகியவை மீதான தாக்குதல்களை அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (க-8)

# அமெரிக்க விஞ்ஞானி ஜேம்ஸ் வாட்சன் காலமானார்

(வோஷிங்டன்)

டி.என்.ஏ கட்டமைப்பைக் கண்டுபிடித்த அமெரிக்க விஞ்ஞானி ஜேம்ஸ் வாட்சன் தனது 97 ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார்.



1953 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் விஞ்ஞானி பிரான்சிஸ் கிரிக் உடன் இணைந்து டி.என்.ஏயின் இரட்டைச் சுருள் கட்டமைப்பைக் கண்டுபிடித்தார்.

இது 20 ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய திருப்புமுனையாக இருந்தது. டி.என்.ஏயின் இரட்டைச் சுருள் கட்டமைப்பைக் கண்டுபிடித்ததற்காக அமெரிக்க விஞ்ஞானி ஜேம்ஸ் வாட்சனுக்கு 1962 ஆம் ஆண்டில் நோபல் பரிசும் கிடைத்தது.

இவர் 1928 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சிகாகோவில் பிறந்தார். தனது 15 வயதில் சிகாகோ பல்கலைக்கழகத்தில் படிக்க புலமைப்பரிசில் பெற்றார்.

டி.என்.ஏ கட்டமைப்பு குறித்த தனது ஆராய்ச்சியைத் தொடர கேம்பிரிட்ஜுக்குச் சென்று அங்கு அவர் பிரிட்டிஷ் விஞ்ஞானி பிரான்சிஸ் கிரிக்கை சந்தித்து தனது கண்டுபிடிப்பை வெற்றிகரமாக நிறைவேற்றியமை குறிப்பிடத்தக்கது. (8)

# தாயின் கடைசி ஆசையை நிறைவேற்றிய பிள்ளைகள்

(தமிழ்நாடு)

தமிழ்நாட்டின் சேலம் மாவட்டம், பெத்தநாயக்கனபாளையம், தண்ணீர் பந்தல் பிரதேசத்தில் மூதாட்டி ஒருவரின் மரண சடங்கில், கேக் வெட்டி வித்தியாசமாக அஞ்சலி செலுத்தப்பட்ட நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

வயது மூப்புக் காரணமாக வெள்ளையம்மா என்ற 95 வயதுடைய மூதாட்டி ஒருவர் நேற்று முன்தினம் காலமானார்.

அவருக்கு 6 மகன்களும் 1 மகளும் உள்ள நிலையில், அவர் இறப்பதற்கு முன்னர் தன் குடும்பத்தினரிடம் ஒரு வித்தியாசமான கோரிக்கையை முன் வைத்திருந்தார்.

அதாவது, தான் இறந்தால் துக்கமில்லாமல், ஆட்டம், பாட்டம், கொண்டாட்டங்களுடன் தனது உடலை அடக்கம் செய்ய வேண்டும் என அவர் வலியுறுத்தியிருந்தார்.

இந்தநிலையில் தாயின் கடைசி ஆசையை நிறைவேற்றும் விதமாக அவரது 6 மகன்கள், ஒரு மகள், 24 பேரப்பிள்ளைகள் 25 கொள்ளுப் பேரப்பிள்ளைகள் என ஒட்டுமொத்த குடும்பத்தினரும் இணைந்து அஞ்சலி செலுத்தினர்.

இறுதிச் சடங்கின் ஒரு பகுதியாக அவர்கள் கேக் வெட்டி மூதாட்டியின் நீண்ட ஆயுளையும் அன்பையும் நினைவு கூர்ந்தனர்.

அதனைத் தொடர்ந்து, பூதவுடலை, மேளதாளங்கள் மற்றும் ஆட்டம் பாட்டத்துடன் ஊர்வலமாகக் கொண்டு சென்று அடக்கம் செய்தனர்.

துக்க சம்பவத்தைக்கூட கொண்டாட்ட நிகழ்வாக மாற்றிய இந்தச் சம்பவம், அந்த பிரதேச மக்களிடையே பெரும் ஆச்சரியத்தையும் நெகிழ்வையும் ஏற்படுத்தியுள்ளது. (8)



வெள்ளையம்மாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏவுகணைப் பரிசோதனை நடத்திய வடகொரியா

## கடும் கோபத்தில் அமெரிக்கா



கொரிய தீபகற்பத்தில் ஏவுகணை மற்றும் அணு ஆயுத சோதனை மூலம் வடகொரியா பதற்றத்தை ஏற்படுத்துகிறது.

எனவே பாதுகாப்புக் கருதி அமெரிக்காவுடன் இணைந்து தென் கொரியா அவ்வப்போது கூட்டுப் போர் பயிற்சியில் ஈடுபடுகிறது.

இதனை தங்களுக்கு எதிரான போர் ஒத்திகையாக வடகொரியா தலைவர் கிம் ஜாங் அன் கருதுகிறார். எனவே இந்தக் கூட்டு ராணுவ பயிற்சியைக் கைவிட வேண்டும் என தென் கொரியாவுக்கு வட கொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதற்கிடையே, அமெரிக்க ராணுவ தளபதி பீட் ஹெக்சேத் தென்கொரியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது இராணுவ செலவுகளை உயர்த்தும் தென் கொரியாவின் முடிவுக்கு அவர் பாராட்டு தெரிவித்தார். இது வடகொரியாவின் கோபத்தை மேலும் தூண்டியது.

இந்நிலையில், கிழக்கு கடற்பகுதியில் வடகொரியா கண்டம் விட்டு கண்டம் பாயும் அதிநவீன ஏவுகணை சோதனை நடத்தியதாக தென் கொரியா குற்றம் சாட்டியுள்ளது. (க-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1989 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
1 இல் செவ்
கி.பா: 58 1/2
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L,CEB
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/15571

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அத்தம்
7 இல் செவ்
கி-பா: 60
உயரம்:5'6"
தகைமை/தொழில்:A/L, ITfield
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/15575

பிறப்பு:1989 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி-பா:38
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:BBM, Business (Own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15576

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்:பரணி
உயரம்:5'3"
தகைமை/தொழில்: A/L, Driver
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15577

பிறப்பு: 1986 RC
நட்சத்திரம்:திருவாதிரை
கி-பா-76
உயரம்:5'8"
தகைமை/தொழில்:A/L, Advisor(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15579

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1999 இந்து
நட்சத்திரம்: விசாகம்
உயரம்: 5'6"
கி-பா-12
தகைமை/தொழில்: BCom (Following)
எதிர்பார்ப்பு:உயர்பதவி
தொ.இ: G/15596

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: கேட்டை
உயரம்: 5'3"
கி.பா:16 1/2
தகைமை/தொழில்: Bsc,Engineer
எதிர்பார்ப்பு: வெளிநாடு, Engineer
தொ.இ: G/15598

பிறப்பு:1991 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 37 உயரம்: 5'6"
தகைமை/தொழில்: MBBS, Doctor.
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Lecturer, Lawyer
தொ.இ: G/15014

பிறப்பு : 1992 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 36
உயரம்: 5'2"
தகைமை/தொழில் : MBBS, Doctor
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Lecturer, Lawyer
தொ.இ:G/15015

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: கேட்டை
1 இல் சூரி செவ்
கி.பா: 47
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L, Crafman
எதிர்பார்ப்பு: வெளிநாடு, உத்தியோகம்
தொ.இ:G/15064

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 479

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# அதிசய மோசடி

அமெரிக்க வியாபாரி ஒருவர் மிகவும் ஆர்வமாக ஒருநாள் பேப்பரைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் கண்ணிலே பட்டது அந்த விளம்பரம். அது என்ன விளம்பரம் என்றால் பாரீஸிலே உள்ள "ஈஃபில் டவர்" இருக்கிறது தானே...அந்த உயரமான கோபுரம் ஏலத்துக்கு வருகிறது என்கிற விளம்பரம் தான் அது!

அப்படி என்றால் அதை ஏலத்திலே எடுத்து... பிரித்து விற்றோம் என்றால் நல்ல இலாபம் கிடைக்குமென்று நினைத்தார்!. உடனே விளம்பரம் கொடுத்தது யார் என்று பார்த்தார்...

அவருடன் தொடர்பு கொண்டார். அவர் உடனே புறப்பட்டு வருகிறேன் என்றார்.

கொஞ்ச நேரத்திலே ஆடம்பரமான கார் ஒன்று வந்த நின்றது. அதுலேயிருந்து இறங்கினார் அவர். தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

"என் பெயர் ஸ்டான்லி லோ" என்றார். "பாரீஸ் நகர அதிகாரிகளில் ஒருத்தர் நான்!" என்றார். "வாங்கள் அந்த டவரைப் பார்க்கலாம்" என்றார். இரண்டு பேரும் போனார்கள். பார்த்தார்கள்.

"உங்க மதிப்பு என்ன?" என்றார் இவர். "உட்காந்து பேசலாம் வாருங்கள்" என்றார் அவர்.

ஒரு ஹோட்டலுக்குப் போனார்கள். உட்கார்ந்து பேசினார்கள்.

"இதோ பாருங்கள் இந்த ஈஃபில் டவர் ஓர் உலக அதிசயம். இருந்தாலும் இரண்டாவது உலகப் போர் சமயத்திலே இது மிகவும் சேதமாகி விட்டது. அதனாலே தான் இதைத் துண்டு துண்டாக கழற்றி முடிவு விற்றுடலாம் என்று பிரஞ்சு அரசாங்கம் முடிவு செய்து விட்டது. அது சம்பந்தமான அதிகாரி தான் நான். அரசாங்கம் சார்பாக இதை விலைபேசி விற்க வேண்டிய பொறுப்பு எனக்கு!" - அப்படி என்றார்.

இரண்டு பேரும் பேசி கடைசியாக 25 ஆயிரம் டொலர் அப்படி என்று ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

இவர் பணத்தைக் கொடுத்தார். அவர் அதை வாங்கிக் கொண்டார். அரசாங்க முத்திரையுடன் பத்திரம் எழுதி அந்த பாரீஸ் நகர ஈஃபில் கோபுரத்தை வியாபாரி பெயருக்கு மாற்றம் செய்து கொடுத்து விட்டு அவர் புறப்பட்டார்.

மறுநாள் இந்த வியாபாரி ஆட்களையெல்லாம் அழைத்துக் கொண்டு கோபுரத்துக்கு வந்தார். கழற்ற ஆரம்பித்தார்.

அப்போதுதான் யாரோ வந்து கழுத்தைப் பிடித்தார்கள். யார் என்று திரும்பிப் பார்த்தால் பொலிஸ்.

"என்ன செய்து கொண்டிருக்கின்றாய்?" என்றார்கள்

"கோபுரத்தை பகுதி பகுதியாக கழற்றிக் கொண்டிருக்கின்றேன்!" என்றார்.

உன்னை பகுதி பகுதியாக கழற்றி விடுவோம்!" என்றார்கள்

" இந்தக் கோபுரத்தை நான் விலைக்கு வாங்கியிருக்கின்றேன்!" பத்திரத்தை எடுத்துக் காட்டினார்.

அதை விற்றவருக்கும் அரசாங்கத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை அவருக்குப் புரிய வைப்பதற்குள்ளே அவர்களுக்குப் போதும் போதும் என்றாகி விட்டது.

"நாம் நல்லா ஏமாந்து போய் விட்டோம்" என்பது அந்த ஆளுக்குக் கடைசியாகத்தான் விளங்கியது.

ஐயோ... ஏமாந்து விட்டேனே... என்று அலற ஆரம்பித்தார். பாரீஸ் பொலிஸ் மிகவும் தீவிரமாக தேட ஆரம்பித்தது.

ஆளைக் கண்டு பிடித்து விட்டார்கள். அந்த ஆளுக்கு ஒன்பது மாதம் ஜெயில். அப்புறம் தான் தெரிந்தது. அந்த ஆள் ஏற்கனவே பலபேரை பலவிதமாக ஏமாற்றியிருக்கிறான் என்பது.

ஐம்பது வயதுக்குள்ளே துண்டு துண்டாக 16 வருடம் ஜெயிலிலே இருந்திருக்கின்றான்.

ஈஃபில் டவரை விற்கிறதற்கு முன்னாடியே லண்டனிலே புகழ்பெற்ற செயின்ட் பால் சர்ச்சை ஒரு ஜப்பானிய பணக்காரருக்கு விற்றிருக்கின்றானாம் இதே ஆள்!

ஜெயிலிலே அடைத்ததுக்கு பின்பும் அவன் கொஞ்சம் கூட கவலைப்படவில்லையாம். பத்திரிகை நிருபர்கள் எல்லாம் சூழ்ந்து கொண்டு "என்ன இப்படி செய்து விட்டீர்களே..!" என்றார்கள்.

"நான் சும்மா வீதியிலே போனால் கூட பணக்காரர்கள் தானாக வந்து என்னிடம் ஏமாந்து போறர்களே.. அதற்கு நான் என்ன செய்வது?" என்றானாம்.

அப்போது அவன் கொடுத்த அந்த பேட்டி உலகம் முழுவதும் மிகவும் பிரபலமாம்.

ஐம்பது வயதுக்கு பின்பு அந்த ஆள் ஏமாற்று வேலையெல்லாம் விட்டு விட்டு... உட்கார்ந்த இடத்திலேயே வாழ்க்கையை அனுபவித்துக்கொண்டு போய் சேர்ந்தானாம்.

உலகத்துலே எப்படியெல்லாம் நடக்கிறது பாருங்கள். நமது ஊரிலே கூட ஒரு கதை சொல்லுவார்கள்: புத்தி கவனமில்லாத இரண்டு பேர் பேசிக்கொண்டிருந்தார்களாம். அதுலே ஒருத்தன்-

"நான் தஞ்சாவூர் பெரிய கோயிலை விலைக்கு வாங்கலாம் என்று இருக்கேன்!" என்றானாம். உடனே இன்னொருத்தன் கொஞ்சம் யோசித்து விட்டு "அதை நான் விற்கிறதா இல்லையே!"

அப்படி என்றானாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## அவரைப்பிஞ்சு




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சித்தமருத்துவத்தில் அவரைப் பிஞ்சானது பிரதானமான பத்திய உணவாக கொள்ளப்படுகிறது. அவரைப் பிஞ்சு துவர்ப்புச் சுவை கொண்டது. இது இரத்தத்தை சுத்தப்படுத்தும். நீரிழிவு நோய் உள்ளவர்கள் அவரைப் பிஞ்சை அதிகம் உணவில் சேர்த்துக் கொண்டால் நீரிழிவு நோயால் உண்டாகும் மயக்கம், தலைச் சுற்றல், கை, கால் மரத்துப் போதல் போன்றன குணமாகும்.

மலச் சிக்கலைப் போக்கும். முந்திய அவரைக்காயை உணவாகச் சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும். தசைநார்களை வலுப்படுத்தும். அவரைப் பிஞ்சு நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்யும். உண்ணும் உணவு சுலபமாக செரிப்பதற்கு உணவில் நார்ச்சத்து அதிகம் இருப்பது அவசியமாகும். மாமிசம், வறுக்கப்பட்ட உணவுகளில் நார்ச்சத்து குறைவாக இருப்பதால் அதை உண்ணும் போது செரிமான உறுப்புக்கள் அந்த உணவுகளை ஜீரணிக்க அதிகம் சிரமப்படுகிறது. நார்ச்சத்து அதிகம் உள்ள அவரைப் பிஞ்சுகளை அவ்வப்போது சாப்பிட்டு வர செரிமான உறுப்புக்களை மேம்படுத்தும்.

அவரைப் பிஞ்சில் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் அதிகம் இருக்கின்றன. இது உடலின் சிவப்பு இரத்த அணுக்கள் பிராணவாயுவை கிரகிக்கும் தன்மையை அதிகப்படுத்துகின்றது. இதனால் உடலுக்கு அதிக உற்சாகமும் எளிதில் உடல் சோர்வு அடையாத நிலையையும் தருகிறது. எனவே குழந்தைகள் முதல் பெரியோர்கள் என அனைவரும் அவரைப் பிஞ்சை சாப்பிடுவதால் அதாவது உணவில் சேர்த்துக் கொள்வதனால் உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பதற்றம், மனஅழுத்தம், தூக்கமின்மை போன்ற நிலைமையால் பாதிக்கப்பட்டவர்கள் அவரைப் பிஞ்சுகளை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்வதனால் உடல் மற்றும் மனநலம் மேம்படும்.



அவரைப்பபிஞ்சுகளில் கல்சியம் சத்தும் அதிகளவில் காணப்படுவதனால் அவரைப் பிஞ்சு கொண்டு செய்யப்பட்ட உணவுகளை வாரம் இரண்டு முறை சாப்பிட்டு வந்தால் பற்கள் மற்றும் எலும்புகளில் உறுதித்தன்மை அதிகரிக்கும். அவரைப் பிஞ்சுகளில் பொட்டாசியம் சத்து அதிகம் காணப்படுவதால் அடிக்கடி அவரைப் பிஞ்சுகளை உணவில் சேர்த்துக் கொண்டால் அதியுயர் குருதி அமுக்கத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவுகிறது. மேலும் இதயத்திற்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் நாடிகளில் இறுக்கம் ஏற்படுவதை தடுத்து மாரடைப்பு ஏறுபடுவதற்கான அபாயத்தையும் குறைக்கின்றது. அவரைப் பிஞ்சில் காணப்படும் இரும்புச் சத்தானது இரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவை சரியாக வைத்திருக்க உதவுகிறது. இரும்புச்சத்து நிறைந்த அவரைப் பிஞ்சுகளை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்வதனால் நுரையீரலுக்கு அதிகம் பிராண வாயு கிடைத்து சுலபமாக சுவாசிக்கவும் முடிகிறது.

அவரைக் காயில் நிறைய புரதச்சத்து, குறைவான கொழுப்பு, தேவையான கனிமச் சத்துக்கள் மற்றும் விற்றமின்கள் உள்ளன. அவரைப் பிஞ்சில் காணப்படும் அதிக அளவு போலேட்டு மூளை செயற்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது. செரரோனின், டோபமைன போன்ற நரம்பியக்கடத்திகளின் உற்பத்திக்கு போலோட்டு அவசியம். இவை மன நிலை கட்டுப்பாடு நினைவாற்றல் போன்ற செயற்பாட்டிற்கு முக்கியமாக திகழ்கிறது. அவரைப் பிஞ்சில் பிளேவனொயிட்டுகள் மற்றும் பொலி பினோல்கள் உள்ளிட்ட ஆக்சிஜனேற்றங்கள் நிறைந்துள்ளன.

இவை தீங்கு விளைவிக்கும் ஃப்ரீ டடிக்கல்களால் ஏற்படும் சேதத்திலிருந்து உடலை பாதுகாக்க உதவுகின்றன. எனவே புற்று நோய்கள் ஏற்படும் அபாயத்தையும் குறைக்கக்கூடியதாக உள்ளது. எனவே சித்த மருத்துவத்தில் சாத்வீகமான, பத்திய உணவாக அவரைப் பிஞ்சிற்கு முக்கிய இடம் உள்ளது. அவரைப் பிஞ்சில் காணப்படும் உயிர்ச்சத்து C ஆனது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் ஆற்றலையும் மேம்படுத்துகிறது.

பருவகாலமாகிய கார்த்திகை, மார்கழி, தை தொடங்கி பின்பனி காலங்களில் விளையக்கூடியது அவரையாகும். எனவே மரபணு மாற்றப்பட்ட எல்லாக் காலங்களிலும் கிடைக்கும் அவரை இனங்களை விட பருவ காலங்களில் கிடைக்கும் நாட்டு அவரைப் பிஞ்சுகளை அதிகம் உணவில் சேர்த்துக் கொள்வதனால் மருத்துவக் குணங்களும் நிறைந்து கிடைக்கும். அவரைப் பிஞ்சில் நார்ச்சத்துக்களும் அதிகம் இருப்பதனால் ஜீரணத்தை மெதுவாக்கி இரத்த சர்க்கரையை கட்டுக்கள் வைத்திருக்க உதவி செய்யும். குறிப்பாக சர்க்கரை உயர்த்தும் திறன் மிகமிகக் குறைவு.

எனவே நீரிழிவு நேயாளிகளுக்கு ஓர் சிறந்த உணவு அவரைப் பிஞ்சாகும். அவரை இனங்கள் பல உண்டு. பொது வான பனிஅவரை, சிறகவரை, கோழியவரை, கொடியவரை கத்தி அவரை என பல வகைகள் உண்டு எதுவானாலும் மரபனு மாற்றப்படாத பாரம்பரிய இனங்களை பயன்படுத்த வேண்டும்.

# இராசிபலன்

10.11.2025
ஐப்பசி 24, திங்கட்கிழமை
பஞ்சமி முற்பகல் 8.41 மணி வரை

புனர்பூசம் பின்னிரவு 1.43 மணிவரை
சுப நேரம் 12.05-1.35 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை
சுபமுகூர்த்த நாள்

சந்திராஷ்டமம்
அனுசம், கேட்டை

வளவன்




ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், போசன சுகமுண்டு.




வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.




நண்பர்கள் சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், பயணத்தால் பலனுண்டு, பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள்.




அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், கட்டடப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், திறமைகள் வெளிப்படும் நாள், பிறர் உதவியுண்டு, போசன சுகமுண்டு.




பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு.




குடும்பத்தினரிடையே கோபமாக பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை ஏற்படலாம், உடல் நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.




அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு வரலாம்.




கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், காரிய அனுகூலமுண்டு.




பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பெற்றோர் மீதான பாசம் கூடும்.

தகுதியற்றவர்களைப் பார்த்து இரங்காதே அது உனக்கு கேடு விளைவிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 905





சுந்தர சோழர் கான இன்பத்தில் மெய் மறந்து கண்களை மூடிக்கொண்டிருந்தார். திடீரென்று, "ஐயோ! ஐயோ!" என்ற கூக்குரலைக் கேட்டுக் கண் விழித்துப் பார்த்தார். "குழந்தையைக் காணோமே! அருள்மொழியைக் காணோமே" என்று பல குரல்கள் முறையிட்டன.

சுந்தர சோழர் பரபரப்புடன் சுற்றுமுற்றும் பார்த்தார். காவேரியின் வெள்ளத்தில் அவருடைய செல்வக் குழந்தையான அருள்மொழியை யாரோ ஒரு ஸ்திரீ கையினால் பிடித்துக் கொண்டு தண்ணீரில் அமுக்கிக் கொல்ல முயன்று கொண்டிருந்தாள். சொல்ல முடியாத பயங்கரத்தை அடைந்த சுந்தரசோழர் காவேரி வெள்ளத்தில் குதிக்க எண்ணினார்.

அச்சமயம் அந்த ஸ்திரீயின் முகம் அவருக்குத் தெரிந்தது. அது விகாரத்தை அடைந்த மந்தாகினியின் முகம் என்பதை அறிந்து கொண்டார். உடனே அவருடைய உடல் ஜீவசக்தி அற்ற ஜடப் பொருளைப் போல் ஆயிற்று. தண்ணீரில் குதிக்கப் போனவர் படகிலேயே தடால் என்று விழுந்தார்.

படகிலே விழுந்த அதிர்ச்சியினாலே தானோ, என்னமோ, சுந்தர சோழர் துயிலும் கனவும் ஒரே காலத்தில் நீங்கப் பெற்றார். புயல் மழை காரணமாக வழக்கத்தைவிடக் குளிர்ச்சி மிகுந்திருந்த அவ்வேளையில் அவருடைய தேகமெல்லாம் வியர்த்திருந்தது.

இவ்வளவு நேரமும் கண்ட தோற்றங்கள் எல்லாம் கனவில் கண்டவை என்பதை உணர்ந்தபோது அவருடைய நெஞ்சிலிருந்து ஒரு பெரும் பாரத்தை எடுத்தது போன்ற ஆறுதல் ஏற்பட்டது. எதிரே பார்த்தார் அறையில் ஒருவரும் இருக்கவில்லை. தீபம் மட்டும் எரிந்து கொண்டிருந்தது.

தாம் தூங்கிவிட்டபடியால் பக்கத்து அறையில் இருக்கிறார்கள் போலும்! கையைத் தட்டி அழைக்கலாமா என்று எண்ணினார். "சற்றுப் போகட்டும் கனவுத் தோற்றத்தின் அதிர்ச்சிகள் நீங்கட்டும்" என்று எண்ணிக் கொண்டார்.

அப்போது மேல் மச்சியிலிருந்து ஏதோ மிக மெல்லிய சப்தம் கேட்டது. அது என்னவாயிருக்கும்? முகத்தைச் சிறிதளவு திருப்பிச் சப்தம் வந்த திக்கை நோக்கினார். மேல் மச்சில் தூணைப் பிடித்துக் கொண்டு விளிம்பின் வழியாக ஓர் உருவம் இறங்கி வருவது போலத் தோன்றியது.

### 32 ஆம் அத்தியாயம்
### "ஏன் என்னை வதைக்கிறாய்?"

சுந்தர சோழர் மிக்க வியப்பு அடைந்தார். மேன் மாடத்திலிருந்து அவ்வாறு தூண்களின் விளிம்பின் வழியாக யார் இறங்கி வருகிறது? எதற்காக வரவேண்டும்! இத்தனை நேரம் கண்ட குழப்பமான கனவுகள் நினைவு வந்தன.


இதுவும் கனவிலே காணும் தோற்றமா? இன்னும் தாம் தூக்கத்திலிருந்து நன்றாக விழித்துக் கொள்ளவில்லையா? இந்தச் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காகச் சுந்தர சோழர் மறுபடியும் கண்களை மூடிக் கொண்டார்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## கரும்பாயிரத்தின் கவலை!



(நேற்றைய தொடர்ச்சி)

அதுல ஒருத்தன் கஷ்டப்படணும்னு எழுதியிருந்தா அவன் கஷ்டப்பட்டுதான் ஆக வேண்டும். தலைவிதியை யாராலும் மாற்ற முடியாது." என்று ஆணித்தரமாக கூறினான் கரும்பாயிரம்.

கணவனின் மனதை என்ன சொன்னாலும் மாற்ற முடியாது என்று கண்ணம்மாவுக்கு தெரியும். "சரி அதுக்கு என்ன இப்போ? கஷ்டம் வந்தா கஷ்டப்பட்டுட்டு போறோம். அதுக்காக இப்பவே கண்ணீர் சிந்தணுமா? அடுத்தாப்புல செய்ய வேண்டிய வேலையை பாருங்கே," என்று விடயத்தை அதோடு முடித்து வைத்தாள். இருந்தாலும் கண்ணம்மாவின் மனதில் கவலை வந்துவிட்டது. பொழுது விடிந்தது. கரும்பாயிரத்துக்கு ஜோசியர் சொன்னதே மனதில் ஒலித்துக் கொண்டிருந்தது. "எப்படி கஷ்டப்பட போகிறோமோ தெரியலையோ!" என்று நினைத்தபடி சோர்வுடன் படுக்கையை விட்டு எழுந்தான்.

"என்னங்க! அந்த ஜோசியர் எங்க இருக்காரு? அவருடைய விலாசத்தை சொல்லுங்க. என்னோட ஜாதகத்தை அவரிடம் சென்று காட்டி, பலன் கேட்டு வருகிறேன்," என்று கேட்டாள் கண்ணம்மா, வேண்டாம் கண்ணம்மா! எனக்கு கஷ்டம் என்றால் உனக்கு மட்டும் நல்லது நடக்குமா? ஜோசியருக்கு வேறு செலவு செய்ய வேண்டாம்," என்று அலுத்துக் கொண்டான் கரும்பாயிரம்.

"சரி வேண்டாம் விடுங்க. எனக்கு தெரிந்த இன்னொரு ஜோசியரிடம் காசு இல்லாமல் நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்க குளித்து, சாப்பிட்டு விட்டு வேலைக்கு கிளம்புங்க," என்று வேலையை கவனிக்க சென்றாள் கண்ணம்மா? வேலை முடித்து மாலை ஆறு மணிக்கு வந்தான்

"நான் இன்னிக்கு அந்த ஜோசியரிடம் போயிட்டு வந்துட்டேன். என் ஜாதகத்திலே என்ன இருக்கு தெரியுமா? நான் இன்னும் இரண்டு வருஷத்தில் புது வீடு கட்டி, அதில் குடியேற வேண்டுமாம்," என்றாள் கண்ணம்மா. "உளராதே கண்ணம்மா! ஏற்கனவே எனக்கு கஷ்டகாலம் ஆரம்பித்து விட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதைத்துக் கொண்டே இரு முளைத்தால் மரம் இல்லையேல் உரம். ~ சேகுவேரா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு உதவுங்கள்

2025ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகிறது. வழமையில் உயர்தரப் பரீட்சை ஆகஸ்ட் மாதங்களில் நடைபெற்று வந்ததாயினும் கொரோனாப் பெருந் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாகப் பாடசாலைத் தவணைகளில் ஏற்பட்ட மாற்றங்களால் உயர்தரப் பரீட்சை நவம்பர் மாதத்துக்கு நகர்ந்துள்ளது.

இப்பரீட்சையை ஆகஸ்ட் மாதத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்தாகின்றன.

பொதுவில் நவம்பர் மாதம் மழை காலமாக இருப்பதால், பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி வரலாம்.

அதிலும் துவிச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்கள் மூலம் பரீட்சை நிலையங்களுக்குச் செல்கின்ற மாணவர்கள் மழையில் நனையக்கூடிய வாய்ப்புகள் உண்டு.

தவிர, அவர்கள் வீதியால் பயணிக்கும் போது ஏனைய வாகனங்கள் வேகமாகப் பயணித்து, வீதி ஓரங்களில் தேங்கி நிற்கும் மழை நீரை அடித்துச் சிதறிவிட அதனால், பரீட்சைக்குச் செல்லும் மாணவர்களின் சீருடைகள் அழுக்காகக்கூடிய நிலைமைகளும் உள்ளன.

இங்குதான் வாகன சாரதிகள் மிகவும் பொறுப்புடன் நடந்து மாணவர்களுக்கு எந்த வித இடையூறுகளும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

இதற்கும் அப்பால், பஸ் வண்டிகள் மூலம் பரீட்சை நிலையத்துக்குச் செல்லும் மாணவர்களை ஏற்றாமல் செல்கின்ற சூழ்நிலைகளும் ஏற்படலாம்.

பயணிகளின் நெருக்கடி காரணமாக இத்தகைய நிலைமை ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு.

இங்குதான் அரச, தனியார் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகள் உயர்தரப் பரீட்சையைக் கருத்தில் கொண்டு பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

சிலவேளைகளில் பரீட்சை மண்டபங்களுக்கு அருகில் மாணவர்களை இறக்கிவிட்டால் கூட, அது சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு பேருதவியாக அமையும்.

இதுவிடயத்தில் அனைத்துத் தரப்புகளும் மிகவும் கருசனையோடு செயற்பட்டு பரீட்சை எழுதுகின்ற மாணவர்களுக்கு எந்தவித இட்டல் இடைஞ்சல்களும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வது கட்டாயமானது.

கூடவே இது மழை காலம் என்பதால், பரீட்சை மண்டபங்களில் ஒழுக்குகள், வெளிச்சம் இல்லாத நிலைமைகள் காணப்படலாம்.

ஆகவே, இது தொடர்பிலும் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமானது.

# போதைப்பொருளின் பிடியில் சிக்கிய இளைஞர்களை மீட்க விசேட திட்டம்

## அமைச்சர் விஜேபால தெரிவிப்பு

போதைப்பொருட்களுக்கு அடிமையான இளைஞர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்குடன் அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்க ஆலோசகர்களை நியமிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இதற்காக சுமார் 300 ஆலோசகர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

இந்த மறுவாழ்வுத் திட்டத்திற்காகத் தொண்டர் சேவையாளர்களைக் கொண்ட ஆலோசகர்கள் பயன்படுத்தப்பட உள்ளனர்.

தற்போது 750 பேர்களைக்கொண்ட ஆலோசகர்களின் தொண்டர் சேவைக்குழு ஒன்று இதற்குத் தயாராக உள்ளது.

இவர்களில் சுமார் 300 பேர் தேவைப்படும் நேரங்களில் மறுவாழ்வு நடவடிக்கைகளுக்காக ஆலோசனை வழங்க ஈடுபடுத்தப்படுவார்கள்.

இவ்வாறு ஈடுபடுத்தப்படும் நபர்களுக்குச் சில சலுகைகள் அல்லது கொடுப்பனவு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இத்திட்டத்தின் ஊடாக போதைப்பொருளுக்கு அடிமையான இளைஞர்களில் ஒரு பகுதியினருக்கு மறுவாழ்வு அளிக்கப்படும். கூடிய பாதிப்புக்களை எதிர்நோக்கும் இளைஞர்கள் அவர்களின் நிலையைப் பொறுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவார்கள்.

மறுவாழ்வு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படும் இளைஞர்களின் பெற்றோர்களையும் அழைத்து, ஆலோசகர்களுடன் கலந்துரையாடிய பின்னரே மறுவாழ்வுத் திட்டம் செயற்படுத்தப்படும் என்றார். (ம-7)

# பரீட்சை மோசடிக்கு விடைகொடுக்க அமுலாகும் புதிய நடைமுறைகள்

## பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு

2025 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் பரீட்சார்த்திகள் பின்பற்ற வேண்டிய முக்கிய நடைமுறைகள் குறித்து இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் விசேட அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

அதன்பிரகாரம் பரீட்சார்த்திகளது அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பரீட்சை நடக்கும் முழு காலப்பகுதியிலும் முகம் திறந்த நிலையில் இருக்க வேண்டும்.

அதேபோல தகவல் தொடர்பு சாதனங்களை பரீட்சையின்போது பயன்படுத்துவதை, பரீட்சை மோசடிகளைத் தடுக்கும் நோக்கில் நோக்குநரால் பரீட்சார்த்திகளது காதுகளை அவதானிக்கக்கூடியவாறு காதுகளும் தெரியும்படி இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை பல தேர்வு வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கும் போது வினாப்பத்திரத்திலே விடைகளைக் குறிக்காது திணைக்களத்தால் வழங்கப்படும் விடைத்தாளில் விடைகளை குறிக்கவேண்டும். அவ்வாறு குறிக்கப்பட்ட விடைகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

எனவே, பரீட்சார்த்திகள் நேரத்தை முகாமைத்துவம் செய்து, சரியான விடைகளை விடைத்தாளில் குறிக்க வேண்டும்.

அத்துடன் தேவையற்ற பதற்றங்களை தவிர்க்கும் நோக்கில் அனைத்துப் பரீட்சார்த்திகளும் பரீட்சை ஆரம்பிக்கவிருக்கும் நேரத்திற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னதாகவே பரீட்சை நிலையங்களுக்குச் சமூகமளிக்க வேண்டும் எனவும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-7)

# பல்கலைக்கழக மகளிர் விடுதியிலிருந்து கரு மீட்பு

## பொலிஸார் தீவிர விசாரணை

பேராதனைப் பல்கலைக்கழகத்திலுள்ள விஜேவர்தன மகளிர் விடுதியின் நான்காவது மாடியில் அமைந்துள்ள கழிப்பறை ஒன்றில் மனித கரு பகுதி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

விடுதியின் பிரதி தலைமை ஆசிரியை அளித்த முறைப்பாட்டின் பேரில் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட பேராதனை பொலிஸார், குறித்த கரு பகுதியை பிரேத பரிசோதனைக்காக பேராதனை மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளனர். (ம-7)

# ஐஸ் போதைவஸ்துடன் சந்தேக நபரொருவர் கைது

புத்தளம் முல்லை நகர் பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து சுமார் 3 கிலோகிராம் "ஐஸ்" போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-7)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2025

‘மரங்களை நேசிக்காத எவரும் இறைவனை நேசிப்பவர்கள் அல்லர்’



# வடமராட்சியில் நேற்று கடும் பனிப்பொழிவு

யாழ். வடமராட்சிப் பகுதியில் நேற்று அதிகாலை மற்றும் மாலை வேளைகளில் கடும் பனிப்பொழிவு நிலவியமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக வயதானவர்கள், குழந்தைகள் மற்றும் நோயாளிகள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

வழமையை விடவும் வெப்பநிலை மிகக் குறைவாகக் காணப்படுவதே இதற்கு முக்கிய காரணமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே குழந்தைகளை தேவையின்றி அதிகாலை மற்றும் மாலை நேரங்களில் வெளியில் அழைத்து செல்வதைத் தவிர்க்குமாறும் நோயாளிகள், வயதானவர்கள் குளிருக்குத் தாக்குப் பிடிக்கும் ஆடைகளை அணிந்து உடல் வெப்ப நிலையைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அடுத்த சில நாட்களுக்கு இதேபோன்ற குளிர் மற்றும் பனிப்பொழிவு நீடிக்கும் என வானிலை ஆய்வுமையம் எதிர்வு கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிலிருந்து கிழக்கிற்கு ஒரு தெய்வீகப் பயணம்

ஒரு நாட்டின் பெருமைக்கு அந்த நாட்டின் அன்பு, அபிமானம் கொண்ட அறிஞர்களும் சான்றோர்களும் யோகிகளும் "அச்சாணி" தவசிகள், முனிவர்கள் பல காலங்களில் பல இடங்களில் வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பது வரலாறு. அவர்களுடைய சிந்தனையில் ஓயாது எண்ணங்கள் உருவெடுத்தன. அந்த ஞானச் செல்வர்கள் இருந்து சிந்தனை செய்த இடம் எல்லாம் சக்தி மிக்க ஆலயமாக உரு எடுத்தன.

அவை இன்று சக்திமிக்க ஆலயமாக விளங்குகின்றன. உயர்ந்த கருத்துக்களை வளர்க்கின்றவர்கள். இந்தப் புண்ணிய தவங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பேராசிரியர் அப்பு ரெட்டியார் உணர்கின்றார். பணபலம், படைபலம், பதவிப் பலம் , இவற்றில் மிகவும் சக்தி வாய்ந்தது ஆத்மீக பலம். எனவே ஆத்மீக சாதனையில் உயர்ந்த இலக்கு உடையவர்களுக்கு இவ்வாலயங்கள், தரிசனங்கள் நல்ல சூழலை உருவாக்க உதவுகின்றது. இந்த வகையில் நாயன்மார்கள், ஆழ்வார்கள், பாடல் பெற்ற தலங்கள் மங்களா சாசனம் பெற்று மறையாக பெரும் புகழுடன் விளங்குகின்றன. இத் திருத்தல யாத்திரையின் வெளிப்பாடே இக் கட்டுரையின் இலக்காகும்.

19 ஆம் நூற்றாண்டில் சூரியன் அஸ்த்தமிக்காத இராட்சியத்தைக் கொண்டு விளங்கிய பிரித்தானிய சாம்பிராட்சியத்தின் குடியேற்ற நாடாக விளங்கியது இலங்கை.

வான்கோழியாட்டத்தைக் கண்டு கானமயில் தன் நடையை மறந்தது போல போகத்திற்காக மக்கள் புறச் சமயத்தை ஏற்றார்கள். எமது சமயம், மொழி, கலை, பண்பாடு யாவும் சிதைவடைந்து நலிவுற்ற காலத்தில் நல்லூர்ப் பெரும் பகுதியில் ஆறுமுக நாவலர் என்னும் ஞான ஞாயிறு தோன்றியது. அது தன் அறிவு, துணிவு, அர்ப்பணிப்பால் மறுமலர்ச்சி காணச் செய்தது.

அந்த ஞாயிறு தோன்றிய மண்ணில் மட்டுமல்ல சைவ உலகு எங்கும் ஒளியையும் வளர்ச்சியையும் தந்தது. தமிழகத்திலும் ஞானப்பயிரை வளர்த்தது அந்த ஞாயிறு உச்சி வானத்தைத் தொட்ட வேளை திருவாவடுத்துறை ஆதீனம் நாவலர் என்ற பட்டத்தை சூட்டி சிவப்பணிக்கே ஆளாகியது என்று மகாவித்துவான் தண்ட பாணி தேசிகர் குறிப்பிடுகிறார்.

நாவலர் அவர்களுக்கு பின்னால் அவர் வழியினில் தொண்டாற்றிய அறிஞர்கள் பலர். அவர்களுள் நாவலர் அவர்களின் எண்ணங்களுக்கு உருவம் கொடுத்தவராக சேர் பொன். ராமநாதன் அவர்கள் விளங்குகின்றார்.

நாவலர் கட்டிக்காத்த சைவ மரபை பண்பாட்டை சைவ மக்களும் இளைஞர்களும் கட்டிக் காத்ததன் பொருட்டு ராமநாதன் கல்லூரி பரமேஸ்வராக் கல்லூரி அத்துடன் சிவ வழிபாட்டிற்கென பரமேஸ்வரன் ஆலயத்தையும் கட்டினார். இன்று அக் கல்லூரிகள் சர்வ கலாசாலைகளாகத் திகழ்கின்றன.

சேர் பொன் ராமநாதன் உருவாக்கிய யாழ் பல்கலைக்கழகம் இன்று சைவசித்த அந்த மெய்யிலை வளர்த்து எடுப்பதிலும் சைவ சித்தாந்த மாணவர்களை உருவாக்கி சைவ சித்தாந்த நெறிமுறைகளை கட்டி காப்பதில் உலக ரீதியில் பெரும் பணியாற்றி வருகிறது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்தம் படிக்க கிடைப்பது சிவப்பேறு. என்றும் அதனை பெறுவதற்கு ஒருவர் பல பிறவிகளில் தவம் செய்து இருக்க வேண்டும் என்று விரிவுரை நேரங்களில் பல தடவை பேராசிரியர் கோபாலகிருஷ்ண அய்யா கூறுவதனை நான் எண்ணி எண்ணி வியந்து இருக்கின்றேன்.

அது எத்தனை அனுபவ பூர்வமான உண்மை. இந்த பட்டப்படிப்பிலே பல்துறை சார்ந்த பேராசிரியர்கள் விரிவுரையாற்றுகின்றார்கள். எமது தேசம் மட்டுமின்றி தமிழக பேராசிரியர்கள் அருணை பாலறாலாயன் போன்றவர்களிடம் பாடம் கேட்பது என்பது எத்தனை பாக்கியம். சொல்லில் அடங்காது. இந்த பேராசிரியர்கள் தமது கற்பித்தலுடன் தமக்கு முன் வாழ்ந்த பேராசிரிய பெருமக்களின் அனுபவ சிந்தனைகளை அள்ளித் தெளிப்பது ஒரு அற்புத பேறாக இருக்கின்றது.

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே சைவ சித்தாந்த மாணவர்களை உருவாக்க அவர்கள் பெரு முயற்சி செய்வதனையும் அர்ப்பணிப்பினையும் அவர்களின் விரிவுரைகள் கண்டிப்பு என்பன உணர்த்துகின்றன. யாழ்பல்கலை கழகம் உயர் பட்டப்படிப்புகள் பீடம் என்பது ஒரு வரப்பிரசாதம் என்பதனை அந்த உயர் பீடத்தில் அடி எடுத்து வைத்த முதல் நாள் அது எனக்கு கொடுத்தது.

திருவாசக விரிவுரையில் கலாநிதி சுப்பிரமணிய ஐயா அவர்கள் இது ஒரு ஆய்வு சார்ந்த கல்வி. ஒவ்வொரு மாணவர்களின் தேடலை அறிமுகம் செய்வதற்கான வாய்ப்பு. அத்துடன் மாணவர்கள் தங்களை நிலை நிறுத்துவதற்கான ஒரு களமாக பல்கலைக்கழகம் விளங்குகின்றது. இது இப்படித்தான் என்பதை விட ஆய்வு செய்வது சுவாரஸ்யம். இது தான் பல்கலைக்கழக நெறி ஆழமாக உழ வேண்டும். அதி விளைச்சலை பெற வேண்டும்.

திருவாசகத்தில் மாணிக்கவாசகர் என்ன சொன்னார் என்பதை விட நீங்களே மாணிக்கவாசகராக மாற வேண்டும். ஆழ்ந்த அறிவு ஞானம் கொண்ட தமிழர் சைவ சித்தாந்த தத்துவம் அனைத்து பேராசிரிய பெருமக்களிடமும் இந்த ஆய்வியல் சிந்தனையை உணர முடிகிறது. சேர் பொன் ராமநாதன் உருவாக்கிய இன்றைய யாழ்.பல்கலைக்கழகத்தில் பயிலுகின்றவர்கள் பரமேஸ்வர பெருமானின் கருணைக்கு கடமைபாடு உடையவர்கள் என்று கோபாலகிருஷ்ண ஐயர் ஆகம வகுப்பிலே குறிப்பிடுவதுடன் நீங்கள் இங்கு கற்றதையும் பெற்றதையும் எப்படி அடுத்த கட்டத்திற்கு நகர்த்தி செல்வீர்கள் என்ற அவருடைய ஆதங்கத்தையும் நான் உள்ளத்தில் பதித்து கொண்டேன்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பரமேஸ்வர பெருமானின் சந்நிதி முன்பிருந்து ஒரு திரித்தல யாத்திரைப் பயணத்தை மேற்கொண்டேன். என்னுடன் வயோதிபர்கள், நடுத்தர வயதினர், இளைஞர்கள் என்று 45 பேர் இணைந்து கொண்டார்கள். இது ஒரு தெய்வீகப் பயணம். திருகோணமலை, மட்டக்களப்பு, ஏழுமலை என்று தொடர்ந்தது இந்த யாத்திரையில் என்



முதல் இலக்கு மீன் பாடும் தேன்னாடு என்று சிறப்பிக்கப்படும் மட்டக்களப்பு. அங்கே உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது என்று உணர்த்திய விபுலானந்த அடிகளின் சமாதியைச் சென்று வழிபட வேண்டும் என்று பேர் ஆவல் ஏனோ என்னை பெரிதும் பற்றிக் கொண்டது. சைவசித்தாந்த வரலாற்று விரிவுரையில் கலாநிதி செல்ல மனோகரன் கலாநிதி ஶ்ரீவாமன் அவர்களின் விரிவுரைகளும் அந்த தேடலை எனக்கு அதிகப்படுத்தியது என உணர்கிறேன்.

லண்டன் கனக துர்க்கையின் திருவருளினால் லண்டனில் இருந்து சைவ சித்தாந்தத்தை படிக்க யாழ் பல்கலை கழகம் வந்து எனக்கு அந்த நாட்டில் எத்தனையோ பேர் இதை கேட்க வேண்டும் என்ற ஆவலில் இருக்கின்றார்கள். என்பதை அறிவேன் அந்த நாடு மட்டுமன்றி பலரும் பயனடைய வேண்டும் எனும் எண்ணம் அவர்கள் பங்காளிகளாக வரவேண்டும் எனும் ஆதங்கத்தில்.

அத்துடன் சைவ சித்தாந்த



அமிர்தத்தை யாவரும் பருக வேண்டும் என்ற எண்ணத்தில் இக்கட்டுரையை வரைகிறேன். யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்பு சைவசித்தாந்த பிரிவினர் நடாத்திய ஆசிரியர் தின விழாவை நிறைவு செய்து கொண்டு இரவு 11 மணி அளவில் எனது பயணம் பல்கலைக்கழகம் முன்றலில் இருந்து ஆரம்பமானது. மறுநாள் காலை திருக் கோணேஸ்வரர் ஆலயத்தில் தரிசனம் நிறைவு செய்து இரவு மட்டக்களப்பு சென்று அங்கு மாமாங்கத்தில் ராம கிருஷ்ணர் மடத்தில் தங்கினோம்.

இரவு உணவு அங்கேயே சமைத்து உண்டோம். மறுநாள் காலை ஐந்து மணிக்கு காலை பூஜை பஜனைகள் முடிந்து 9 மணியளவில் விபுலானந்த அடிகளின் ஆசிரமத்திற்கு புறப்பட்டோம். சைவம் தமிழ் இரண்டும் இரு கண்களாக போற்றிய சைவ சான்றோர்களின் பெருமைமிக்க ஒருவரான அடிகளின் சமாதியை நெருங்கினோம்.

அடிகள் ஆரம்பித்த சிவானந்தா கல்லூரி முதல் தரிசனம் கொடுக்க இதயத்தால் பணிந்து ஆச்சிரமத்தை அடைந்தோம். அடிகளின் சமாதியின் முன் நாம் அனைவரும் இருந்து வணங்கினோம். அந்த முகத்திலே இருந்து ஒரு தெய்வீக தேயஸ் மிக விளங்கி எம்மை அன்புடன் நோக்கி ஆசீர்வதிக்கின்ற அந்த உருவத்தை கண் குளிர காணமுடிந்தது. சமாதியை வலம் வந்து வணங்கி 15 நிமிட உரையினை நிகழ்த்தினேன் விழுமியம் சார்ந்த வாழ்வு காலதேச வர்த்தமானங்களை கடந்த வாழ்வு என அவரிடம் இருந்து உணர்கின்றேன்.

நிரந்தரமானவன் அழிவதில்லை என்ற கண்ணதாசன் கவி வண்ணம் தனி ஒரு போராளியாக நின்று சைவத்தையும் தமிழையும் கட்டிக் காத்த ஆறுமுக நாவலர் பணியினை அந்த நெறியில் நின்று காத்த அடிகளாரின் சாதனைகளை குறிப்பிட்டபோது பலருடைய கண்களில் கண்ணீர் பனித்தது.

இதில் மிக அற்புதம் பத்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் அதில் கவனம் சிதையாது கிரகித்துக் கொண்டார்கள். சமயம், மொழி,இலக்கியம்,கலை, கல்வி, விஞ்ஞானம், ஆராய்ச்சி முதலான பல்துறை சார்ந்த சாதனங்களை அடிகளார் நிகழ்த்திய போதிலும் ஆன்மீகமே அவருடைய வாழ்க்கையில் ஆதாரம். அத்தகைய அடிகளாரின் அருட் பார்வை ஆசீர்வாதம் எமக்கு பெரும் பேறாக அமைந்ததை அனைவரும் உணர்ந்து பரவசத்தில் மிதந்தோம்.

1892 இல் மட்டக்களப்பு காரை தீவில் அவதரித்த விபுலானந்த அடிகளாரின் சாதனைகள் என் உரையில் சாராம்சமாக அமைந்தது. மானிப்பாய் இந்து கல்லூரியின் அதிபராக இருந்த காலத்தில் அடிகளின் மன மாற்றம் தமிழ்நாடு சென்று துறவியானார். முத்தமிழ் வித்தகராக விஞ்ஞானம், கலை ஆராய்ச்சியாளராக தமிழகம் இலங்கை முதல் பேராசிரியராக தனக்கென வாழா பிறருக்கு உதவியவர் ஆக அவர் வாழ்ந்து காட்டிய விதம் அதனை என்ன என்று நமக்குள்ளே ஒரு மன பூரிப்பு ஏற்படுகின்றது.

விபுலானந்த அடிகள் இன்று இறந்தும் இறவாத ஒரு பெருமகனாக வாழ்ந்து கொண்டே இருக்கிறார். அவருடைய சந்நிதி தந்த அமைதி சாந்தி உள்ளார்ந்த மகிழ்ச்சி எல்லாமே எம்மைப் பற்றி இழுக்க சமாதியை விட்டு பிரிகின்றோம். கருணை முகம் எம்மை நோக்கி ஆசீர்வதிக்க உள்ள கமலமடி உத்தமனார் வேண்டுவது என்ற கவி நயம் உள்ளத்தை நிறைக்க விடை பெறுகின்றோம்.

**சிவ.தணிகாசலம்,**
**அமைப்பாளர்,**
**இலண்டன் இலக்கிய சங்கமம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த உயர்...

இதற்காக நாடு முழுவதும் 2,362 பரீட்சை மத்திய நிலையங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு பரீட்சைக்கு 246, 521 பாடசாலைப் பரீட்சார்த்திகள் மற்றும் 94,000 தனியார் பரீட்சார்த்திகள் என மொத்தம் 340,521 பரீட்சார்த்திகள் தகுதி பெற்றுள்ளனர்.

பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், தனியார் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விண்ணப்பதாரர் ஒருவர் அனுமதி அட்டையைப் பெறவில்லை என்றால், திணைக்களத்தின் அதிகாரபூர்வ வலைத்தளத்திற்குச் சென்று அதனைப் பதிவிறக்கம் செய்யலாம் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.

மேலும் காலை 8.30க்கு பரீட்சை ஆரம்பிக்கும் என்பதால், மாணவர்கள் ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக, பரீட்சை நிலையத்திற்குச் சமுகமளிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சாதாரண நாட்களில் மதியம் ஒரு மணிக்கு பரீட்சை தொடங்கும் எனவும், வெள்ளிக்கிழமைகளில் மாத்திரம் மதியம் 2.00 மணிக்கு ஆரம்பமாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்னணுக் கடிகாரங்கள், பிற மின்னணு உபகரணங்கள் மற்றும் கைபேசிகள் ஆகியவற்றைப் பரீட்சை மண்டபத்திற்குள் கொண்டு செல்வது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது. (ம-7)

## யாழில் வலிப்பு...

துவாரகன் (வயது-29) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞனுக்கு கடந்த 7ஆம் திகதி காலை 9.00 மணிக்கு வலிப்பு ஏற்பட்டது.

தொடர்ந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இளைஞனை சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த இளைஞன் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7,104)

## மூச்செடுக்க...

நிவேதா (வயது 24) என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை 2.00 மணியளவில் குறித்த யுவதி மூச்செடுப்பதற்கு சிரமப்பட்டுள்ளார்.

இந்நிலையில் நோயாளர் காவு வண்டிக்குத் தகவல் வழங்கிய நிலையில், நோயாளர் காவு வண்டியில் அங்கு வந்தவர்கள் யுவதி ஏற்கெனவே உயிரிழந்துள்ளதாகத் தெரிவித்து திரும்பிச் சென்றனர்.

பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக யுவதியின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7,104)

## கைத்துப்பாக்கி...

பிரிவிற்குட்பட்ட அல்விஸ் டவுன் சந்தியில் பொலிஸாரின் கட்டளையை மீறிச் சென்ற கார் ஒன்றை வத்தளை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவினர் துரத்திச் சென்று நிறுத்தி சோதனை செய்துள்ளனர்.

இதன்போது அந்தக் காரின் சாரதியின் இருக்கைக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கி ஒன்றை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி குறித்த காரின் சாரதி கைது செய்யப்பட்ட நிலையில் அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் சந்தேகநபர் இந்தத் துப்பாக்கியை மற்றொரு நபரிடம் வழங்குவதற்காக எடுத்துச் [illegible] துள்ளது.

இதனையடுத்து குறித்த நபரையும் வத்தளைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாபொல பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 33 வயதுடைய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம்தொடர்பில்வத்தளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## ஐஸ் போதைப்...

ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

## வடக்கு...

இணையத்தளங்கள் மூலமாக நடைபெறும் மோசடி நடவடிக்கைகள், குறிப்பாக Telegram, WhatsApp போன்ற கணக்குகள் மற்றும் பிற சமூகவலைத்தளக் குழுக்களைப் பயன்படுத்தி நடத்தப்படும் நிதி மோசடிகள் குறித்து தொடர்ச்சியாக முறைப்பாடுகள் பதிவாகி வருகின்றன.

இவ்வாறான சம்பவங்களில், மோசடியாளர்கள் பொதுமக்களை ஏமாற்றி அவர்களது வங்கிக் கணக்கு எண்கள், கடவுச்சொல் (User name / Password), QR குறியீடுகள் போன்ற இரகசிய தரவுகளைப் பெற்று பின்னர் நிகழ்நிலை (online) வேலைகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி பல்வேறு கணக்குகளுக்கு பணம் செலுத்தும்படி ஊக்குவித்து நிதி மோசடிகளில் ஈடுபடுவதாக அறிய முடிகின்றது.

விசேடமாக சமீப காலங்களாக குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகவும் உயர்கல்வி வாய்ப்புகள் ஏற்பாடு செய்வதாகக் கூறி நபர்களை ஏமாற்றி பாரிய அளவிலான பண மோசடிகள் நிகழ்த்தப் படுவதைப் பற்றி முறைப்பாடுகள் அதிகமாக பதி[illegible] தானிக்க முடிகின்றது. இந்நிலைமை அதிகமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பதிவாகி வருகின்றன.

ஆகையால், இணையத்தைப் பயன்படுத்தும்போது இத்தகைய மோசடிகள் தொடர்பாக எச்சரிக்கையாக செயற்படுமாறும், வெளிநாட்டுச் சேவைகள் அல்லது வேலைவாய்ப்புகளுக்கான வாய்ப்புகளை ஏற்குமுன் அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் அல்லது வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் போன்ற பதிவு செய்யப்பட்ட அதிகாரபூர்வ அமைப்புகள் மூலம் மட்டுமே உறுதி செய்யப்பட வேண்டும் என்று பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (ம-7,104)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.11.09
சீட்டிழுப்பு இலக்கம் 6008
M 8 8 4 2 6 0
அத சம்பத M 4 2 6 0
சீட்டிழுப்பு இலக்கம் 0583
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.11.09
சீட்டிழுப்பு இலக்கம் 0124
மீனம் 13 16 41

தன நிதானய
திகதி - 2025.11.09
சீட்டிழுப்பு இலக்கம் - 2038
E 06 09 15 68 E

மெகா பவர்
திகதி 09/11/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2356
J 26 09 10 44 65

ஜய
திகதி 2025.11.09
சீட்டிழுப்பு இலக்கம் 0276
S 4 0 7 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4250
சீட்டிழுப்பு திகதி 09.11.2025
F 03 14 41 57
F

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.11.09
சீட்டிழுப்பு இலக்கம் 1317
துலாம் 03 25 27 59 துலாம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
09.11.2025 வெற்றி வாரம் 0716
ஆங்கில எழுத்து Z
மற்றும் வெற்றி இலக்கம் 4 8 7 6 7 4
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,235,160.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2982
சீட்டிழுப்பு திகதி 2025.11.09
தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 05 39 51 53 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 73,626,140.80

சனிதா
திகதி 09.11.2025 வெற்றி வாரம் 5143
54 62 68 74 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,839,768.40

சசிரி
வெற்றி வாரம் 812
சீட்டிழுப்பு திகதி 09.11.2025
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 34 48 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4694
சீட்டிழுப்பு திகதி 09.11.2025
தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 05 16 47 58 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,373,498.40

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
K 28 51 62 72 75
2158
09.11.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.605,898,811.00

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2808
சீட்டிழுப்பு திகதி : 2025.11.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,665,768.80
23 34 55 71 R

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுநீரகம் தேவை

**"O"** குருதி வகை சேர்ந்த ஒருவருக்கு **"O"** குருதி வகை சிறுநீரகம் அவசரமாக தேவை. ஆண், பெண் இருபாலாரும் வழங்கலாம். (5872)

**076 540 6732 (Whatsapp/ Call)**
**077 656 0222**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல Ice cream நிறுவனம் ஒன்றிற்கு உடனடியாக வேலையாட்கள் தேவை.

- சுத்தம் செய்பவர் (Cleaner)
- காசாளர் (Cashier)
- சிட்டை எழுதுனர் (bill clerk )
- உணவு பரிமாறுபவர் (Supplier)

(5864)

தொடர்பு : **077 711 1410**

## பொதுக்கூட்டம்

**இணுவில் இந்து கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்**

காலம் : 23.11.2025 ஞாயிற்றுக்கிழமை
பி.ப 3.00 மணி
இடம் : யா/இணுவில் இந்துக் கல்லூரி

அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

தலைவர், செயலாளர் (5876)

### ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் காரணமாக

# நாட்டில் முதலீட்டாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது

## நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார

(கொழும்பு)

ஊழல் மோசடிகளை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கை காரணமாக முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அதனால் நாட்டில் முதலீட்டாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறதென நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (08) இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான ஜனாதிபதியின் வரவு செலவு திட்ட உரை மீதான முதலாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

வங்குரோத்து அடைந்த, மக்கள் வரிசையில் இருந்து உணவுப்பொருட்களை பெற்றுக்கொள்ளவேண்டிய அரசாங்கத்தை பெற்றுக் கொண்டபோதும் ஒரு வருட காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திர நிலைக்கு கொண்டுவர அரசாங்கத்துக்கு முடியுமாகியிருக்கிறது. இதன் காரணமாக தரப்படுத்தல் நிறுவனங்களால் எமது பொருளாதாரத்தை தரம் உயர்த்தியிருக்கிறது.

நாட்டை அபிவிருத்தி செய்வதாக இருந்தால், நாட்டில் ஊழல் மோசடிகள் இல்லாமலாக்கப்பட வேண்டும். அதற்கு தேவையான சட்ட திட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும். அப்போதுதான் முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை ஏற்படும்.

நிறுத்தப்பட்டிருந்த பல வேலைத்திட்டங்களை வெளிநாட்டவர்கள் இன்று ஆரம்பித்திருக்கிறார்கள். அரசாங்கம் ஊழல் மோசடிகளை நிறுத்துகிறது என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதால், அவர்கள் மீண்டும் நம் நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ள வருகிறார்கள்.

பிரபுக்கள் அரசியல் கலாசாரத்தை நிறுத்தியிருக்கிறோம். அனைவரும் சட்டத்தின் ஆட்சிக்கு கீழ்ப்பட்டவர்கள் என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். அமைச்சர்கள் பொலிஸாருக்கு தொலைபேசி அழைப்பு கொடுத்து அழுத்தம் கொடுப்பதில்லை.

இவ்வாறான முன்னேற்றமே எமது வளர்ச்சிக்கு காரணமாகும். புதிய சட்டங்களாக தேசிய கணக்காய்வில் திருத்தம் மேற்கொண்டுள்ளோம். தவறான முறையில் ஈட்டிக் கொண்டுள்ள சொத்துக்களை மீளப் பெற்றுக்கொள்ள முடியுமான சட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறோம்.

இதுதொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு தனியான பொலிஸ் பிரிவொன்றை பிரதி பொலிஸ்மா அதிபர் தலைமையில் ஏற்படுத்தியிருக்கிறோம் என்றார். (ம-7)

## பிரத்தியேக மற்றும் குழு வகுப்பு

**10 மற்றும் 11 வகுப்பு மாணவர்களுக்கான விஞ்ஞானம், கணிதம்**


(யாழ்.நகரை அண்டிய பகுதிகளில்)
பயிற்சி பெற்ற ஆசிரியர் (5879)

**076 266 3332**

## மரண அறிவித்தல்

### குமாரசாமி இராமச்சந்திரன்

**(முன்னாள் கிளிநொச்சி வர்த்தக சங்க பொருளாளர், கிளிநொச்சி வைத்தியசாலை நலன்புரிச் சங்க உறுப்பினர், யாழ். ஸ்போட் உணவக உரிமையாளர்)**



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் திருநகர் வடக்கு 1ம் ஒழுங்கை கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி இராமச்சந்திரன் அவர்கள் நேற்று 09.11.2025 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லம்மா தம்திகளின் பாசமிகு மருமகனும் நாகம்மா(பேபி) அவர்களின் பாசமிகு கணவரும் இராசலட்சுமி, காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் வடிவாம்பிகை ஆகியோரின் சகோதரனும் அமிர்தலிங்கம், இரஞ்சிதமலர், மகாலிங்கம் (நந்தவேலன்), நடேசமூர்த்தி காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி மற்றும் சுந்தரமூர்த்தி(ஓய்வுபெற்ற தபால் அதிபர்) காலஞ்சென்ற தேம்பாமலர் மற்றும் தெய்வேந்திரம்(வேலழகன் பல்பொருள் வாணிபம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் நந்தகுமார்(செல்வம் - வவுனியா), இரகுமார்(யாழ். அருவி உணவகம்), சந்திரகுமார்(கனடா), காலஞ்சென்ற ஸ்ரீக்குமார்(சதீஸ்) மற்றும் பிரதீப்குமார்(LOLC), திலீப்குமார்(Commerical Micro credit jaffna) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குமுதா, பிரதீபா, சதீஸ்பிரியா(கனடா), தயாழினி (Physiotherapist -DGH killinochchi) மற்றும் ஜீவிகா (யூலி) (நல்லூர் பிரதேச செயலகம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் இளம்புகழன், இளங்கீதன், மினோசா, தாருகா, தருன், கவிந்தியா, ஜஸ்மிதா, ஆதன்ஜன், அபிநயன், ஆகர்சன் ஆகியோரின் அன்புமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.11.2025 இன்று திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மதியம் ஒரு (1pm) மணியளவில் நல்லடக்கத்திற்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1 ஆம் ஒழுங்கை,
திருநகர், கிளிநொச்சி. (5873)

076 3648112, 077 074 7830,
077 054 3624, 077 658 3198

தகவல்:
குடும்பத்தினர்


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4303)

**076 825 7716** (ஆகாஸ்)


## தேவை

**ஆண், பெண் கமத் தொழிலாளர் தேவை.**

தொழில் பெற–விரும்புகிறவர் விண்ணப்பம் செய்யலாம். தொ. பே. இல. தந்தும் வைக்கலாம்.(நெல்லியடி, வதிரியை அண்மித்த இடங்கள்) விபரங்களுடன், தொடர்புகொள்ள :–

1. 077 630 38 45 தொ. பே. மட்டும்
2. +94 77 630 38 45 வாட்ஸாப்பால் sms ல் மட்டும்
3. +41 77 925 29 08 வாட்ஸாப்பால் sms ல் மட்டும

(1697)


## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆணகள் விரும்பத்தக்கது )
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-4302)

**V2 TRAVELS** 076 1410725, 076 8226236
v2vacancies@gmail.com

## கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2430/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery (C-4302)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2160/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2500/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2280/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241, 076 822 6237

## யாழ்ப்பாணத்தில் Voyzant

10 பேர் கொண்ட குழுவில் ஒரு நபரிற்கு - 185,000/=

தென்னிந்திய ஆலய தரிசனம் 09 இரவுகள்/10 நாட்கள்

தமிழ்நாட்டில் பிரசித்தி பெற்ற 35 இற்கு மேற்பட்ட ஆலயங்கள் (மேலும் தனிப்பட்ட கோரிக்கைகளுக்கான சுற்றுலாப் பயணங்களும் மேற்கொள்ளப்படும்.)

மேலதிக விபரங்களுக்கு:
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். (OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866

Voyzant(PVT)Ltd (5725)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org